விலை சதம் 60

பக்கங்கள் 10

RECEIVED
1980-3-3
PERIODICALS
DIVISION
UNIVERSITY OF JAFFNA CAMPUS LIBRARY

பாவியுங்கள்!
நாள் எல்லாம்
நறுமணம் கமழும்
அண்ணு பத்தி
ஜெயந்தி பத்தி
கஜானு பத்தி

ஈழநாடு
வார மலர்
THE EELANADU VARAMALAR

'மில்க்வைற்
அப்பியாசக்கொப்பி'

மாணவ மணிகளே!
5 மில்க்வைற்சவர்க்காரப் பெட்டி மேலுறைகளை அனுப்பி மேற்படி
அப்பியாசக் கொப்பியை
பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

மலர் 22 மாசி 19 ரபி ஆகிர் 14 ஞாயிற்றுக்கிழமை (2—3—80) இதழ் 21

புதிய பஸ்களை இறக்குமதி செய்யும் நிலையில் அரசு இல்லை

இருப்பதைக் கொண்டே சிறந்தசேவை
வடபிராந்திய தலைவர் குணசேகரா கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

'உலகநாடுகளில் பஸ்களினதும், உதிரிப்பாகங்களினதும் விலைகள் முன்பு இருந்ததைவிட பல மடங்கு அதிகரித்துள்ளன. முன்னர் 10 பஸ்களை வாங்கிய பணத்திற்கு இப்போது ஒரு பஸ் கூட வாங்கமுடியாத நிலை இருக்கிறது. அதனால் புதிய பஸ்களைத் தருவிக்கக்கூடிய நிலையில் எமது அரசு இல்லை. உள்ள பஸ்களைக்கொண்டே மக்களுக்குச் சிறந்த சேவையாற்ற நாம் முயல வேண்டும்.'

கொழும்பிலும் பார்க்க யாழ்ப்பாணத்தில்தான் கூடுதலான மக்கள் பஸ்களில் பிரயாணம் செய்கிறார்கள். விடுமுறைத்தினங்களில் கொழும்பில் குறைவாகவே மக்கள் பஸ்களில் பிரயாணம்செய்கிறார்கள். ஆனால் எல்லா நாட்களிலும் யாழ்ப்பாணத்தில் பிரயாணிகள் அதிகமாக இருக்கின்றனர். எரிபொருள் விலையேற்றத்தை அடுத்தே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைமைக் காரியாலயத்தில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில், வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. டட்லி குணசேகரா மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி மாநாட்டில் வடபிராந்திய இ. போ. ச. பொது முகாமையாளர் திரு. குமாரத்தின [illegible] செயலாற்று முகாமையாளர் திரு. கே. நாகரத்தினம், திரு. சேவியர், சபை உறுப்பினர் திரு. எம். எஸ். அலக்சாண்டர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

திரு. டட்லி குணசேகரா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

தர்மிஷ்ட அரசு எல்லா மதத்தவர்களையும், இனத்தவர்களையும் ஒரேமாதிரி நடாத்த விரும்புகிறது.

லாபம் அடையமுடியாது

எரிபொருள் விலையேற்றத்தினால் பஸ்கட்டணத்தை உயர்த்தும்படி பிராந்திய சபைகள் பலமுறை அரசைக்கோரிய போதும்கூட இவ்வளவு கால

(10-ம் பக்கம் பார்க்க)

தபால் தந்தி கட்டணங்கள் அதிகரிக்கும்

(யாழ்ப்பாணம்)

அரசு தபால்கட்டணங்களை உயர்த்தத்தீர்மானித்துள்ளது. இம் மாதம் 17-ம் திகதிமுதல் தபால்கட்டணங்கள் அமுலுக்கு வரும்.

இதுவரை உள் நாட்டுக் கட்டணமாக இருந்த 25 சத முத்திரை இனிமேல் 35 சதமாகவும், 15 சதமாக இருந்த தபால் அட்டை 25 சதமாகவும், இதுவரை 1 ரூபா25 சதமாக இருந்த தபால் பதிவுக் கட்டணம் 1 ரூபா 60 சதமாகவும் அதிகரிக்கும். தந்திக்கட்டணங்களும் உயர்த்தப்பட்டவுள்ளது. (கொ-இ)

The
Windmill
Wind is a gift of
nature.
It is free.
Please
use it.



வடபகுதி அபிவிருத்தியில்
ஒரு புதிய திருப்பம்

Estd 1922

எரிபொருள் விலையேற்றம் என்ற கவலையா ?
இதோ இருக்கிறது
காற்றுடி நீர் இறைக்கும் இயந்திரம்
யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக நாமே நிர்மாணம் செய்து
அமைத்துக் கொடுக்கிறோம்.

★ ★ வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரி
கண்காட்சியில் 3-3-80 முதல் 8-3-80 வரை
காற்றுடி நீர் இறைக்கும் இயந்திரம்
இயங்குவதைப் பார்வையிடலாம் ★ ★

DUCO, DULUX
PENTALITE
சகல
பெயின்ற் வகைகளும்
பெற்றுக்கொள்ளலாம்

THE WORLD'S LOVELIEST COLOUR
ROBBIALAC
Colorizer
EMULSION
THE WORLD'S LOVELIEST COLOUR
ROBBIALAC
Colorizer
SUPER GLOSS

HAMILTON BICYCLE RS. 800/-

சாமுவேல் சன்ஸ் அன் கோ லிமிட்.

206, 208 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 4 6 2

ஈடிணையற்ற "இராஜவைத்தியர்"
அமரர் அ. க. குமாரசாமி

அகில இலங்கை சித்த வைத்தியர் சங்கத்தில் பதினெட்டு ஆண்டுகள் தொடர்ச்சியாகத் தலைவராக இருந்து 24-8-1979-ல் அமரரான 'இராஜ வைத்தியர்' அமரர் திரு. அ. க. குமாரசாமி ஈழத்திருநாட்டிலே வைத்தியத்துறையில் ஈடிணையற்ற மாமணியாக விளங்கினார்.

வட்டுக்கோட்டைக் கிராம சபை உறுப்பினராகவும், ஆயுர்வேதக் கவுன்சிலின் அங்கத்தவராகவும், மனநோய் வைத்திய நிபுணராகவும் சமாதானநீதிபதியாகவும் திகழ்ந்து 'இராஜ வைத்தியர்' என்னும் உயர் வரிசையினைப்பெற்று சமூகஜோதியாக விளங்கிய அமரர் அ. க. குமாரசாமி அவர்கள் தன்னலம் கருதாது நாட்டு மக்களுக்குச் செய்த சேவைகள் அளவிடற்கரியன.

வைத்தியகலாநிதி அ. கந்தையாவுக்கும், கற்பக அம்மையாருக்கும் அருந்தவப் புதல்வனாக 13-5-1899-ல் அவதரித்த இவருக்கு வைத்தியகலாநிதி அ. க. காசிப்பிள்ளை சகோதரனாகவும், திருமதி மாணிக்கம் வீரபத்திரர், திருமதி சிவஞானதேவியார் துரைசுவாமி ஆகியோர் சகோதரிகளாகவும் இடைக்கப்பெற்றனர்.

இவர் தமது நுண்மாண் நுழைபுலம் மிக்க ஆராய்ச்சியால் வைத்தியத்துறையில் ஈடிணையற்ற வைத்தியராகத் திகழ்ந்ததுடன் சமூகசேவைகளிலும் ஈடுபட்டு கிராமமக்களிடம் இறவாப்புகழ்பெற்றவர். தமது கிராமத்துக்கு அவசியம் தேவையாக இருந்த மன்றங்களை ஆரம்பித்து, அவற்றின் வளர்ச்சிக்குவேண்டிய பணவுதவிகளையும், பொருள் உதவிகளையும் செய்ததோடு தமது

கிராம மக்களுக்கும் இலவச வைத்திய சேவையைச் செய்து மங்காப்புகழ்பெற்ற பெருந்தகையாளராகவும் விளங்கினார்.

வட்டு. சிவன் நெசவு நிலையமும், காந்திஜீ கிராமமுன்னேற்றச் சங்கமும் இவரது சொந்த வளவிலேயே கட்டடப்பட்டன.

ஈழத்திருநாட்டிலே ஈடிணையற்ற மனநோய் வைத்தியராகத்திகழ்ந்த இவருக்குஇலங்கை அரசாங்கம்உறுதிமொழிஆணையாளர், சமாதானநீதிபதி முதலான சிறப்புப்பட்டங்களையும் வழங்கி அன்னாரைக் கௌரவித்தது.

வைத்தியமாமணி அமரர் அ.க. குமாரசாமி மறைந்தாலும் இவர் புகழ் மறையாது என்பது நம்பிக்கை.

புலவர்
திரு.நா.க. தங்கரத்தினம்.

எழுதுவினைஞர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு G. C. E. (O / L) தராதரமும் ஆங்கிலத்தில் வேலை செய்யுந் தேர்ச்சியுமுள்ள எழுதுவினைஞர் இருவர் தேவை. விண்ணப்பிக்கவும்: இல. 56, பாமன்கடை லேன், கொழும்பு 6. (5085)

கடைக் கட்டிடங்கள்
வாடகைக்கு

யாழ்ப்பாணம் பெரியகடைப் பகுதியில், நவீன சந்தைக்கண்மையில், பிரதான வீதியில், தொழில்ஸ்தாபனங்கள் நடாத்தக்கூடிய 3 வசதியுள்ள கடைகள் உடன் வாடகைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: விளம்பர இல. 57, மே / பா. ஈழநாடு, யாழ்ப்பாணம்.

அந்தியேட்டி அழைப்பு
முத்துக்குமாரு தில்லையம்பலம்

3-2-80 ல் சிவபதம் அடைந்த முத்துக்குமாரு தில்லையம்பலம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 4-3-80 செவ்வாய்க்கிழமை பகல் 11-00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அவ்வைபவத்தில் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பெருமக்கள், பேரப்பிள்ளைகள்.
103, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம். 5087

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

கேள்வி விளம்பரம்

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தரம் பிரிக்கப்பட்ட 11,407 வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. வைப்புப்பணமாக ரூபா 250/- செலுத்தி விண்ணப்பப்படிவம் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்கள் பதிவுத்தபால் மூலம் இடது பக்க மூலையில் 'வெற்றுச்சாக்குகள் கேள்வி' என்று எழுதப்பட்டு பொதுமுகாமையாளர், சங்கானை ப. நோ. கூ. சங்கம், சங்கானை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 10-3-80.

பொதுமுகாமையாளர்

சங்கானை,
28-02-80.

சங்கானை.

5103

தவக்கால
நற்சிந்தனை

'இயேசுபெருமானின் திரு அவதாரக் காலத்தில் நான் பாலஸ்தீன நாட்டில் வாழ்ந்திருந்தால், நான் இயேசுநாதரின் திருப்பாத கமலங்களைக் கழுவி அவருக்குத் தொண்டு செய்திருப்பேன். என் கண்ணீரால் அல்ல; எனது இதய இரத்தத்தால் அவரது திருவடிகளைக் கழுவித் தொண்டாற்றியிருப்பேன்.'

—சுவாமி விவேகானந்தர்

நம் உடல் சிலிர்க்கிறது அல்லவா! ஆன்மாவின் பாவங்களைத் தீர்க்கத் தம் உதிரத்தைச் சிந்தினாரே, அந்த உத்தமனுக்கு, சிலுவைநேசனுக்குத் தமது இதய இரத்தத்தையே காணிக்கையாக்கி இயேசுவின் பொற்பாதக் கமலங்களைக் கழுவவேண்டுமென்கிறாரே. எத்தகைய பெருந்தன்மை. ஆம்; விவேகானந்தர் இயேசுவைக் கேவலம் மனிதப்பிறவியாக நினைக்கவில்லை. அவரைத் தெய்வத்தின் திருவுருவாகவே கருதி வழிபடுகிறார்.

உள்ளத்தைத் திறந்து வெளியிட்ட வார்த்தைகளல்லவா இவை. திருமுழுக்கினால் கிறிஸ்துவோடு ஒன்றிணைக்கப்பட்ட நீ என்ன செய்யப் போகிறாய். சிந்தனை செய்!

—ஞானஒளி

Brownson

வாங்குங்கள்
பிரவுண்சன்
அரறூட்-மா

பிரவுண்சன் அரறூட மா
அரச உணவு மருந்துச் சட்டத்தின்
கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்டது.

வரி விளம்பரம்

விற்பனைக்கு

சிங்கர் தையல் மெஷின் (மின்சாரம்) 'கெல்வினேற்றர்' குளிர்சாதனப்பெட்டி, பிலிப்ஸ் டெலிவிஷன் 12 அங்குலம், கமரா, புறயெக்டர் 8 M.M., நாஷனல் பனசோனிக் 3இன்1, றைஸ் குக்கர், ஸ்திரிக்கை, றேடியோவும் மணிக்கூடும், இன்னும் பல. கே. பி. பாலகிருஷ்ணன், 692, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். 5105

பலாலி றோட்டில் மூன்று பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும். க. பாலசிங்கம், பலாலி றோட், திருச்செல்வம் வீதி, கோண்டாவில். 5114

நாறல்பாக்கு, கள்ளுத்தவறணைகளுக்கு உபயோகிக்கக்கூடிய சாடிகள் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பார்வையிடலாம். ச. ஜெகதீஸ்வரன், கீரிமலை வீதி, சித்தன்கேணி, 5090

சாவகச்சேரி டச் வீதியில் சந்தை, ஆஸ்பத்திரி, பாடசாலை, தபாற்கந்தோர் என்பவற்றுக்கு மிக அண்மையில் வீடு கட்டக்கூடிய 2 1/2 பரப்புக்காணிகள் இரண்டு விற்பனைக்குண்டு. விபரங்களுக்குத் தொடர்புகொள்ளவும். எஸ். கே. திரவியநாயகம், சட்டத்தரணி, சாவகச்சேரி. 5112

புதிய Key Board தமிழ் ரெமிங்டன் தட்டெழுத்து இயந்திரம் விற்பனைக்கு உண்டு. அரியரத்தினம், 43, பலாலி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம், 5108

3-3-80 தொடக்கம் 8-3-80 வரை நடைபெறவிருக்கும் யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை பொருட்காட்சி நிலையத்தில் அமைந்துள்ள மில்க்வைற் விளம்பர காட்சி சாலையில் தயாரிப்புக்கள் யாவும் சகாயவிற்பனையுடன் அன்பளிப்புகளும் வழங்கப்படும். மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்து பெறுமதிவாய்ந்த பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற் - யாழ்ப்பாணம். 5091

மிகவும் நல்ல நிலைமையிலுள்ள மொரிஸ் மைனர் (பத்தாயிம் ரூபா பிளுன்ஸ் வசதியுடன்) உடன் விற்பனைக்குண்டு. நாதன் டிஸ்பென்சறி கல்வியங்காடு, யாழ்ப்பாணம் 5107

சுத்தமான காரல் கருவாட்டுத் தூள் No. 2 கருவாட்டுத் தூள் விற்பனைக்குண்டு மற்றும் கடற்சிப்பி, எள்ளுப் பிண்ணாக்கு, தேங்காய்ப் பிண்ணாக்கு, சோளம் ஆகியவற்றை நறிக்கப்பட்ட கால எல்லைக்குள் அரைத்துக் கொடுப்போம், கரன் மில்லிங் சென்ரர், நிம். 46 அரியாலை 3-ம் கட்டை சந்தி, கண்டி றோட், யாழ்ப்பாணம். 5075

சாவகச்சேரி நகரமத்தியிலிருந்துஒருமைல் தூரத்தில்சாவகச்சேரி - பருத்தித்துறை வீதியில் வீதி ஓரமாக 14 பரப்புக்காணி நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் உடனடியாகவிற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளும் முகவரி: வை. சுப்பிரமணியம், வாடி வீடு, சாவகச்சேரி. 5076

தேவை

வேலைபழகுவதற்கு ஆட்கள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். ஸ்ரூடியோ-நித்ய சித்ரா, சங்கானை. 5109

தேவை

தனியார் வைத்தியசாலையில் கடமையாற்றுவதற்குப் பெண் உதவியாளர் தேவை. யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. வயது. 25-40 உட்பட்டவர்கள் 9-3-80-க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 5106, C/o ஈழநாடு லிமிட்., யாழ்ப்பாணம். 5106

8 ஸ்ரீக்கு மேற்பட்ட நல்ல நிலையில் உள்ள Volks Wagon (வோக்ஸ்வகன்) கார் விலைக்குத்தேவை. விலை, மொடல், எந்த வருடத்தில் செய்தது என்னும் விபரங்களுடன் உடன் எழுதவும். A. L. M. இக்பால். 4-ம் குறிச்சி, நிந்தவூர். 5082

கரம்பன் கிழக்கிலிருக்கும் பாக்கியம் வைத்தியசாலையில் ஆயுள்வேத வைத்தியர் ஒருவருக்கு உதவியாளராகக் கடமையாற்ற குடும்பப்பாரமற்ற ஆண், பெண் இருபாலாரும் தேவைப்படுகின்றனர். தகைமைகள்: க.பொ. த சாதாரண பரீட்சையில் ஆங்கிலம் உட்பட ஆறுபாடங்களில் சித்தியடைந்தவராகவும் ஆங்கில வைத்தியரிடத்தில் ஆங்கில வைத்தியம் பயின்றவராகவும் இருத்தல் விரும்பத்தக்கது. புதன் தவிர்ந்த ஏனைய நாட்களில் நற்சாட்சிப்பத்திரத்துடன் நேரில் தொடர்புகொள்ளவும். பாக்கியம் அன் சன்ஸ், கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை. 5097

நன்கு அனுபவமுள்ள டெண்டர் நெசவாளர் தேவை. தங்குமிடவசதிகள் கொடுக்கப்படும் விபரங்களுக்கு 3-3-80 திங்கட்கிழமை நேரில் வரவும். அல்லது கடித மூலம் தொடர்புகொள்ளவும். க. மகாதேவன் ஆனந்த நெசவு நிலையம், கருங்காலி, காரைநகர். 5071

வகுப்புக்கள்

எலக்ரிக் வயறிங், வெல்டிங், மோட்டமெக்கானிசம், படவரை பயிலுநர் ஆகியவற்றிற்கான பகல், மாலை, வார இறுதி வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன. புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 10-3-80. Patrician Industrial Insititute, 59, St. Patrick's Road, Jaffna. 5110

கல்வி

உயர்கலைக் கல்லூரி யாழ்ப்பாணம் வித்தியாபகுதியினரால் அங்கீகரிக்கப்பட்டது. G. A. Q., G. S. Q. வகுப்புக்கள் ஆரம்பித்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பௌதிகவியல், இரசாயனவியல், விலங்கியல், தாவரவியல் ஆகிய பாடங்களுக்குச் செய்முறைப் பயிற்சி பெறும் வசதிகள் உண்டு. விஞ்ஞான ஆய்வுகூடம் கல்வித்திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சிறப்புப்பட்டதாரி விரிவுரையாளர்கள் பொறுப்பாகவுமுள்ளனர். அதிபர், 73, பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி. 5086

வித்தியாலய
கட்டிட திறப்புவிழா

(மாவிட்டபுரம்)

மயிலிட்டி கலைமகள் வித்தியாலய புதிய கட்டிடத் திறப்பு விழா, புதிய நூல் நிலையத் திறப்புவிழா, வித்தியாலய தரமுயர்வு குறித்த கொண்டாட்டம், கைப்பணிப் பொருட்காட்சி என்பன மார்ச் மாதம் 7ம் திகதி ஒருங்கே நடைபெறவுள்ளன. இவ்விழாவில் எதிர்க்கட்சித் தலைவரும், காங்கேசன்துறை எம். பியுமான திரு. அ. அமிர்தலிங்கம், வடமாநில கல்வியதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்கள்.

★ பூபாள ராகம் ★

மாத்தளை — வடிவேலன்

'புளரிக்காலத்து மென் இருட்டைக்கிழித்துக்கொண்டு இங்கே வெண்பனி கொட்டிக்கொண்டிருக்கின்றது. அடித்துவிட்ட பஞ்சு போன்று குட்டி மேகங்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாக நீந்திக்கொண்டிருக்கின்றன.'

'மழை இல்லை.' இப்படித்தான் அவன் கடிதத்தை முடித்திருந்தான். அவளுடைய பதில் நீண்டதாக இருந்தது.

'குட்டி மேகங்கள் நீந்திக்கொண்டிருக்கின்றனவா...? ஹாய்...ஹாய்...உங்கள் ஜன்னலின் கம்பியைப் பிடித்தபடியே உற்றுக் கேளுங்கள். பூபாள ராகம் கேட்கும்... என்ன...பூபாளராகம் கேட்கின்றதா?

கடிதத்தை எத்தனை தடவைகள் படித்தானே அவனுக்கே தெரியாது. இன்பக் கிளுகிளுப்பு...உச்சிமலையிலிருந்து ஊற்றெடுத்துக் கட்டுக்கடங்காமல் கொட்டும் தேனருவியாக மனவோடையில் ஓடிக்கொண்டேயிருந்தது.

'காதல் என்பது இத்தனை இதமான...இன்பமா?... சுகம்...இனம் புரியாத சுகம்...

ஓ! மதுரா...நீ ஒரு எழுதாத கவிதை.'

அந்தக் கவிதையை எழுதி முடிக்க முடியாமற் போனபோதும் அவன் தன் பாதையைப் புரிந்துகொண்டமையினுல் வேதனையுறவில்லை; விரக்தியடையவில்லை; அவளும் கூடத்தான்.

'காதல் என்பது ரசமான ரம்மியமான வேதனைதானு?' அவன் கேட்டபொழுது அவள் தன்னுடைய பெரிய விழிகளால் நிதானமாக நோக்கி, 'இல்லை...நீங்க உங்கள் சரியான பாதையில் பயணத்தைத் தொடருங்கள்' என்று கூறினளே. அப்பொழுது அவளது பார்வையில் ஜனித்த தீட்சணியம் வார்த்தையில் தெறித்த சத்தியத்தின் பொறி, தொலைவுமிக்க அவனுடைய பாதையில் நிதானத்துடன் நடக்க ஒளிவிளக்காக ஆனபோது, அவன் உண்மையில் உறுதிபெற்றுன்.

அவன் எப்பொழுதும் சுறுசுறுப்பாகத்தான் இருப்பான். இளமையிலே அவனிடம் படிந்துவிட்ட இயல்பது. சோம்பல் என்பது துளிகூட அவனிடத்தில் அணுகியது கிடையாது. வகுப்பில் முதல் மாணவன். விளையாட்டிலும் மகா கெட்டிக்காரன்.

ஆனல் தோல்வியை சகித்துக்கொள்ளவேமாட்டான். தொட்டதற்கெல்லாம் அடம் பிடிப்பான். தனக்காக நியாயங்களை வகுத்து-அர்த்தங்களைக் கற்பித்து வாதாடத் தயங்கமாட்டான். அப்படி ஒரு பிடிவாதமுடைய அவனின் இயல்பே இது.

'விக்கெட்' 'அம்போ' என சாய்ந்தால் தான் 'அவுட்' என்று மனம் கப்பி வெளியேறுவான். அதில்கூட அவனுக்குத் திருப்தியிராது.

ஜி. சி. ஈ. பரீட்சை எழுதியவுடன் என்னசெய்வதென யோசிப்பதற்கு முன்பே அதிர்ஷ்டம் போல் வேலை அவனைத் தேடிவந்துவிட்டது.

பிறந்து வளர்ந்த ஊர்...பழகிக் களித்த சூழ்நிலை...விட்டுப் போவது என்னவோ மனதிற்கு வருத்தமாகத்தான் இருந்தது...ஆனல் கொழும்புக்குப்போனவுடன் எல்லாமே தலைகீழாக மாறிவிட்டன. தீபாவளி, ஊரில் தேர்த்திருவிழா இப்படி முக்கிய அழைப்புகளுக்குத் தட்டமுடியாமல் வருஷத்தில் இரண்டொரு தடவை வந்து போனுன். மற்றப்படி அவனுடைய நினைவில் இருப்பவைகள் எல்லாம் 'கால்பேஸ்' கடற்கரையும், சினிமாத் தியேட்டர்களும், கொச்சிக்கடை பீஸ்ட் முதலான விழாக்கள் மட்டுமேதான்.

இரண்டு வருடங்கள் எப்படிக் கழிந்தன என்று தெரியவில்லை

பரபரப்பும் ஆரவாரமும் மிக்க கொழும்புச் சூழ்நிலை அவனுடைய இயல்பிற்கு மேலும் வலுவூட்டின. விவேகமானவர்களினதும், வித்தியாசமானவர்களினதும் நட்பு பல துறைகளிலும் அவனை இறங்கச் செய்தது. இலக்கியக் கூட்டங்கள், பாராட்டு வைபவங்கள், பேனு நண்பர் தொடர்பு என்றெல்லாம் இன்பமாகக் காலம் ஓடியது.

இவ்வேளையில்தான் அவனுக்கு மதுராவின் தொடர்பு ஏற்பட்டது.

ஓ!...மதுரா...

அவளை ... எங்கே ... எப்படி முதலில்சந்தித்தான்? வானொலி நிலையத்திலா...? அல்லது பத்திரிகைக்காரியாலயத்திலா? எப்பொழுது முதலில் சந்தித்தான் என்று இப்பொழுது சரியாக நினைவில் இல்லை.

ஆனல், அந்தத்தொடர்பு-பிணைப்பு மிகவும் சூட்சுமமானது. அதில் எவ்வித வெளிவேஷமோ, நடிப்போ கிடையாது. காதல் என்பது அவளைப் பொறுத்தவரைதெய்வீகமானதாகப்பட்டது. வெறும் பொழுதுபோக்கிற்காகவும் தேவைக்காகவும் பழகுபவர்களையும் சூட்சுமமாகக்கூறி தூற்றினள்.

அவன் தன் தந்தையார் அகால மரணமடைந்தபோது குடும்பப்பொறுப்பை ஏற்று நடத்தவேண்டியவனுனன். இத்தனை காலமும் செல்லப்பிள்ளையாக இருந்துவிட்டு திடீரெனகுடும்பப்பொறுப்பை சுமந்து நிலைகலங்கியபோது, அவளின் அன்பு மட்டும் இல்லாதிருந்தால் பைத்தியக்காரனுகியிருப்பான்,

துன்பம் தொடர்ந்த வேளையில் அவள் மீட்டிய இதய வீணையால் அவன் புதிய உற்சாகமும் தைரியமும் பெற்றுன்.

அவள் செய்த உதவிகள் மறக்கமுடியாதவை.

இவர்களுடையகாதல் அவள் வீட்டிற்குத் தெரியவந்தபோது ஒரு பூகம்பமே வெடித்துச் சிதறியது.

எனினும் அவன் நிலைகலங்கவில்லை. நிதானத்துடனும் சிந்தனைத் தெளிவுடனும் நடந்துகொண்டான்.

அப்பாடா அவளுக்குத்தான் எத்தனை நெஞ்சுறுதி... இரை தேடும்வெளவால்களாக பருவகாலத்திற்கு மரங்களை நாடும் அவலங்களுக்குமத்தியில் அவள் ஒரு.. மூச்சுவிட மறந்திடினும் மூடிவுமாருப் பெண் என்று அவள் தீர்க்கமாக எழுதி...... தந்த உறுதியில் அவன் பித்துப்பிடித்துப்போனுன்.

இப்பொழுது அவனுக்குத் தேவையாக இருந்தது புகழ்... புகழ்...அவள்முன் தான் ஒரு காவியநாயகனுகத் திகழவேண்டுமென்று பம்பரமாகச் சுழன்றுன். எங்கு கூட்டமோ அங்கு அவன் நின்றுன். ஆரவாரம்... பத்திரிகைச் செய்தி ... படப்பிடிப்பு ...ஆலாய்ப்பறந்தான்.

அந்த ஆரவாரங்களும், திடீர் எழுச்சிகளும், வெளிவேஷங்களும் அடங்கித் தணிந்தபோது ...

நிதானமாகயோசித்தான்... மாலைகள், ஊர்வலங்கள், கோஷங்கள், ஆளுங்கட்சிச் செல்வாக்கு...யார்யாரோ அவனைப் பயன்படுத்தி பலனடைந்துபோனுர்கள். பலன் ஒன்றுமில்லை.

வக்கரித்தசுயநலங்கள், பருவகால மரங்களை நாடும் வெளவால்களாக சிறகடித்த கேவலத்தை உணர்ந்து தன்னுள்ளே புழுங்கி அவிந்து மனம் நொந்தான். [illegible] குடும்பப்பொருளாதார சுமை மேலும் சிந்திக்கவைத்தன. அவன் புதியவனுனன்.

மதுரா! நீயும் நானும் அலைகடலைத் தழுவி வீசும் தென்றலில் மிதந்தபடியே 'ஐஸ்கிறீம்' சுவைத்து கால்பேஸ் கடற்கரையில்... உலாவி... எழுபது மில்லிமீட்டர் ஈஸ்ட்மன் கலர் திரைப்படத்தை, கைகளை இறுகப் பிணைத்தபடியே பார்த்து ரசித்து... அல்லது...

பொங்கிவரும் மகாவலி புதுப்புனலை ரசித்தபடியே கொக்கோ தோட்டத்து நிழலில் நடந்துகளித்து மாமாவை ஏமாற்றி தெமோதரைக்குப் போய் ஒரு வாரம் வைத்திய லீவில் தங்கிவிடுவதால்...

நிரந்தரமாக எல்லோரையும் ஏமாற்றிவிடலாமா? அல்லது பிரச்னைகள் நிச்சயமாக தீர்த்துவிடுமா? வளர்ந்துவரும் நெருக்கடிகளுக்கு புடம் போடும் பிரச்னைகள்தானே அவைகள்.

ஒரு தடவை பாணந்துறைக்குச் சென்று வரும்போது, அந்த தோழரின் நட்பு அவனுக்குக் கிடைத்தது. அவர் பேச்சின் இறுதியில் தன்னை 'என்ஜினியர்' என்று அறிமுகம் செய்துசொண்டபோது உண்மையில் அவனுல் நம்பமுடியாமல் இருந்தது:

எத்தனை எளிமை...கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துக்கூறும் இயல்பு. அதேவேளையில் உள்ளத்தை உருக்கி ஈர்க்கும்ஆகர்சிப்பு...அவரை அடிக்கடி சந்தித்து கருத்துத்தெளிவு பெற்றுன். தீர்க்கப்படாத பொருளாதார பிரச்னைகளும், முரண்பாடுகளும் ஏற்படுத்தும் தாக்கங்களையும் விளைவுகளையும் புரிந்துகொண்டான். அந்த நல்ல கருத்துக்களையெல்லாம் செயற்படுத்தும் நாடி நரம்பானுன்.

அவனுக்கு உலகின் உண்மை தெரிந்தது. சத்தியம் புரிந்தது அவன் புதியவனுனன், பொய்யான்தும், பிழையானதுமான தன்னுடைய நடவடிக்கைகளையிட்டு தானே வருந்தினுன்.

தனக்கே உரித்தான பிரச்னைகள். தனது சமூகத்துக்கே உரித்தான பிரச்னைகள், மனித குலத்திற்கே உரித்தான பிரச்னைகள் எல்லாம் அவனுக்கு தெளிவாய் புரிந்தது.

அந்த தோழர் என்ஜினியர் பட்டப்பெற்றவர். தான்மட்டும் வாழநினைத்தால் வாய்ப்புக்களை பயன்படுத்திக்கொண்டு எப்படியெல்லாமோ வாழலாம். ஆனல் ... அவர் ஏன் அப்படிச்செய்யவில்லை?

உலகைப் புரிந்துகொண்டமையினுலா...? அல்லது தன் பாதை தெரிந்து நடக்கின்ற படியினுலா ?

கஷ்டங்கள் தனக்கு மட்டுமா? பிரச்னை தன்னுடைய குடும்பத்திற்கு மட்டுமா...? தன்னேடு வேலை செய்யும் சக தொழிலாளர்கள் படும் துயரங்கள்...?

பரப்புக்காணியை அடகு வைத்து பட்டம்பெற்று குடும்பத்தைக் கரையேற்றத் துடிக்கும் இளைஞர்கள்...குடியிருக்க வீடும், ஒருவேளை உணவும் இல்லாது துயரப்படும் தொழிலாளர்கள், உழைத்துக்களைத்து ஆதரிப்பாரின்றி வாடி வதங்கும் முதியோர்கள்...

வேலை தேடி அலையும் ஆயிரமாயிரம் இளைஞர்கள்- யுவதிகள்.

உழைக்காமலே உப்பரிகையில் வாழ்ந்துகொண்டு குறுகிய இன, மத, ரோதங்களை அப்பாவி மக்களிடையே பரப்பிவிட்டு சுயலாபமடையும் கும்பல்களின் போக்குகள்.

அனுக்கு எல்லாமே தெளிவாகத் தெரிந்தது. அவன் செல்லவேண்டிய பாதை தெளிவாகப் புரிந்தது...அது மனித குலத்தின் விடிவிற்காக அவன் செல்லும் திவ்விய யாத்திரை.

அவனில் ஏற்பட்ட இந்த மாற்றத்தை அவள் புரிந்துகொண்டபோது, அவள் தனக்காக துயரப்படவில்லை, மகிழ்ச்சியுற்றுள். ஏனெனில் அந்தப் பாதையின் முடிவில் ஒலிக்கும் பூபாளராகம்...அவள் இசைப்பதே.

(யாவும் கற்பனை)

◆ ◆ ◆

தொடர் கதையோ?

(வளவை மதியான்)

பசும் புல் தரையில்
மினுங்கும் பனித்துளிகளை
ஒக்க, இழைக்கும்
மேனிகளில் ஒடு
வியர்வை ஆறுகள்!

சீதனக் கொடுமையில்
வாழ்வு எனும், சூனிய
லோக வெளியில் காயும்
கன்னிப் பூக்களின்
சோக மணங்கள்!

பல கோண
துன்பங்களுக்கு
மத்தியில் யோசனைச்
சுமைகளை
தாங்க மாட்டாத,
மூளை வண்டியின்
பைத்திய பரிவர்த்தனம்!

கால ஒட்ட நீரில்
கரைந்த காகிதத்
துண்டுகளைப் போல்
உயிரைப் பிடிக்கும்
ஏழைகளின்
உயிர் ஊட்டங்கள்!

வெயில் அரக்கனின்
ஆட்சியில்
சிக்கித் தவிக்கும்
இள மேனிகளின்
தீராத ஆசைகள்!—
அவை
நாளாக நாளாக
இமயம் போல் உயர்ந்து
வான் முகட்டில் முட்டும்
ஏக்கக் காட்சிகள்!

னைவு அலைகளில் ஆடும்
இளம்உளத் துரும்புகள்!-
அவற்றின்
மாருத கவலைகள்
வாழ்வுக்
கடலில் சங்கமிக்கும்
கிளை நதிகள்!

சுக போகிகளின்
வாழ்வின்
காவலர்கள்!...ஆம்
உதிரக் கொதிப்பில்
துடிக்கும்
காவல் தெய்வங்களாம்
மாதாந்த ஊழியர்!—
அவரின்
களைப்பை அறியாத
செல்வரின்
காவலர்தானே எனும்
உள வெறுப்புகள்!

அடிமை வலையில்
பிடிபட்ட மனிதக்
குஞ்சுகளின்
புரியாத நினைவுகளால்
எழும் பரிதாபப்
பார்வைகள்-அவை
எசமானின் களிப்பை
அதிக மாக்கும் நீள்
சுகபோக மாத்திரைகள்!

◆ ◆ ◆

மதமும் அரசியலும்

மதமும் அரசியலும் பிரிக்கமுடியாதவை. மதச் சார்பில்லாத அரசியலானது கொடுங்கோன்மையையோ-குழப்பத்தையோ தான் உண்டுபண்ணும், இந்த இரண்டும்நமக்குவேண்டாம். நமக்கு வாழ்க்கையென்பது ஒரு படிப்பினை. அந்தப்படிப்பை அபிவிருத்தி செய்துகொள்வதற்கும் அதனைக் காரியாமிசத்தில் கொண்டு காட்டுவதற்கும் சாதனமாயிருப்பது சமுதாயம். மதம் நமக்குஉயர்ந்த படிப்பு, அந்தப் படிப்பு செயலில் கொண்டுவரப்படுகிறபோது அரசியலாகிறது.

-மாஜினி

◆ ◆ ◆

பயனுள்ள முயற்சி

தழுவலாக இருந்தாலும் கோகிலா மகேந்திரனின் கட்டுரைகள் இரண்டும் நன்று. பாராட்டத்தக்க பயனுள்ள முயற்சி. தொடர்ந்தும் இது போன்ற அறிவியல் கட்டுரைகளை 'ஈழநாடு' பிரசுரிக்கவேண்டும்.

-வடகோவை
வரதராஜன்

●

தூக்கமா?

17-2-1980-ம் தேதிய ஈழநாடு வாரமலரில் இடம்பெற்ற 'தூக்கமா' என்ற தலைப்பில் கோகிலா மகேந்திரன் அவர்களால் எழுதப்பெற்ற அறிவியல் கட்டுரையைக் கண்ணுற்றேன். மிகுந்த பயனுள்ள விடயங்களைச் சுவையான முறையில் வாசகர்களுக்களிக்கவல்ல தரமான கட்டுரைகளைத் தொகுத்துத் தருவதில் திறமையுள்ளவர் அவர். அறிவியல் விடயங்களை வாசிக்கும்போதே தூக்கம் கண்களை அழுத்திக்கொண்டுவருவது இயற்கை. ஆனல் அவற்றைக் கொஞ்சம் சுவையாகப் போரடிக்காமல் ஆழமாகத் தந்திருந்தார் அவர். தூக்கத்தை வரவழைப்பதற்காக இன்று உயர் மட்டத்தில் உள்ளவர்கள் கையாளும் போதைவஸ்துக்கள் அவர்களை நிரந்தரமான தூக்கத்திற்கே இட்டுச் செல்வதைச் சுட்டிக்காட்டி எச்சரித்துள்ளமை பாராட்டத்தக்க விடயமாகும். இன்னும் இப்படியான பயனுள்ள பல தகவல்களை அவரிடமிருந்தும் அவரைப் போன்ற ஏனைய இளம் எழுத்தாளர்களிடமிருந்தும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

-மாவை ஜி. பாரதி

பேரறிஞர் சேர். பொன். அருணாசலம்

தமிழக சமயக் குருவுடன் அறிஞர்கள் சந்திப்பு

வரலாற்றுவாணர் வை. முத்துக்குமாரசுவாமி

எட்வேட் கார்ப்பென்ரர் 1844-ம் ஆண்டு இங்கிலாந்திலே பிறைற்றினிலே பிறந்தார். அவர் பிறைற்றன் கல்லூரியிலும், அதன்பின்னர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் உள்ள திரிநிற்றி மண்டபத்தில் (1868 1874 வரை) ஆசிரியர் சிறப்புக்குழுவினருள் (Fellow of Trinity Hall, Cambridge) அங்கு இசையின் வரலாறு, வானசாஸ்திரம் ஆகியவற்றில் போதனாசிரியராக விளங்கினார். அவர் கிறிஸ்தவ திருச்சபையிலும் ஒருவராகச் சில காலம் (1869-1873) இருந்தார். 1877-ம் ஆண்டு அவர் ஷெஃப்ஃபீல்ட் (Sheffield) என்னும் நகருக்கு வந்து வசித்தார். அங்கு ஷெஃப்ஃபீல்ட் பொதுவுடைமைச்(சோஷலிஸ்ற்) சபையினை திறுவுவதற்கு இவர் ஒரு முக்கிய பிரமுகர். அவர் திரிநிற்றி மண்டபத்தில் ஆசிரியராக இருந்தபொழுது, அருணாசலம் கிறைஸ்ற் கல்லூரியில் ஒரு மாணவனாக இருந்தார். அவர்கள் இருவருக்கும் ஓர் அந்தரங்க நட்பு ஏற்பட்டது. அது பிற்காலத்தில் பேறு நட்பாக வளர்ந்தது. இன்று ஷெஃப்ஃபீல்ட் மத்திய நூல்நிலையத்தில் அறிஞர் கார்ப்பென்ரர் எழுதிய பலப்பல ஏடுகள், கடிதப் பரிமாறல்கள் யாவும் மிகச்சிறந்தமுறையில் பேணிப் பாதுகாத்து வரப்படுகின்றன அந்த எழுத்துத்தொகுதிகளில் கார்ப்பென்ரர் அருணாசலத்துக்கு எழுதிய கடிதங்கள் உள்ளன. 1976-ம் ஆண்டு செப்ரம்பர் 24-ந் திகதி ஷெஃப்ஃபீல்ட் மத்திய நூல்நிலையத்துக்குச் சென்று, கார்ப்பென்ரர் அருணாசலத்துக்கு எழுதிய கடிதங்களைப் படித்துச் சுவைத்தேன். மகிழ்வுடன் சில குறிப்புகளும் எடுத்துத் திரும்பினேன்.

ஆத்மீக சற்குரு

அருணாசலம் அவர்கள் தஞ்சாவூரில் உள்ள இராமசாமி என்னும் சைவசித்தாந்த சிவஞானிக்கு அறிமுகமானார். அன்றுமுதல் அவரையே தனது ஆத்மீக சற்குருநாதர் என அருணாசலம் அவர்கள் கொண்டார். 1890-ம் ஆண்டு தனது ஆத்மீக நண்பராகிய எட்வேட் கார்ப்பென்ரரைத் தம்மை வந்து இலங்கையில் காணும்படி ஒரு மடல் அனுப்பிவைத்தார். அருணாசலம் அவர்கள் தான் குருநாக்கலில் மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றிய பொழுது தஞ்சாவூரிலிருந்து ஈழத்துக்குத் தமது சற்குருவை அருட்பரானந்த அடிகளை வரவழைத்திருந்தார். கார்ப்பென்ரர் குருநாக்கலுக்கு வந்து அவரது நண்பர் அருணாசலத்தைச் சந்தித்தார். அவர் தனது சற்குருநாதரை கார்ப்பென்ரருக்கு அறிமுகம்செய்து வைத்தார். இராமசாமி என்பவரே பராநந்த சுவாமிகளாக விளங்கியவர். அவர் சேர். பொன. இராமநாதனின மருகர் டாக்டா எஸ். நடேசன் அவருடைய ஹளத்திரர் ஆவார்.

எனது வாழ்நாட்களும், எனது கனாக்களும் என்னும் நூலில் (பக். 251) கார்ப்பென்ரர் கூறியது பின்வருமாறு:-

'நானும் அருணாசலமும் ஞானவடிவாகிய குருவை ஆறு வாரங்கள் வரை, ஒவ்வொரு நாளும் தரிசித்து, இந்திய நாட்டுமெய்பாட்டு விளக்கங்கள் யாவையும், தமிழர்களின் தத்துவஞானங்களைப் பற்றிச் சிறப்பாக அறிந்தோம்.' அவர் பகவத்கீதைக்கு நல்ல தெளிவான விளக்கம்செய்தனர்.

எட்வேட் கார்ப்பென்ரர் தாம் எழுதிய 'ஆதாம் மலையிலிருந்து எலிஃபன்ரா' என்னும் நூலில் (1900) பக். 134, ஞானியைத் தரிசித்தல் என்னும் உட்பிரிவில், அவர் கூறியுள்ளது இது:-

இந்தச்சிறந்த ஞானி பொன். அருணாசலம் அவர்களைக் குருநாக்கலுக்கு வந்து சந்தித்தார். அப்பொழுது அருணாசலம் அவர்கள் குருநாக்கல் மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றினார். பரானந்தஅடிகள் அருணாசலம் அவர்களுக்கும் எட்வேட் கார்ப்பென்ரருக்கும் வேதாகம-சைவசித்தாந்தக் கருத்துக்களைச் சிறப்பாகவும் ஊட்டினார்.

எட்வேட் கார்ப்பென்ரர் தமது 'சனநாயக தத்துவம்' என்னும் நூலின் முகவுரையில் அது எழுதத் தமக்கு ஆவேசத்தை அளித்தது தமது குருவினுடைய சற்போதனைகளும் பகவத்கீதையுமே என்று சாங்கோபாங்கமாக உரைத்துள்ளார்.

அருணாசலம் அவர்கள் மறைந்தபின் அவர் துணைவியார் லேடி அருணாசலம் அவர்கள் எட்வேட் கார்ப்பென்ரருக்குத் தமது கணவரின் வாழ்க்கை நூலை எழுதித் தரும்படி வேண்டுகோள் விடுத்தார். இதற்கு கார்ப்பென்ரர் அவர்கள் தமக்கு அவ்வாறு செய்ய அவகாசம் இல்லை என்றும் அன்னார் தமக்கு எழுதிய மடல்களை பதிப்பித்தல் நன்று என்னும் கருத்தைத்தெரிவித்தார். அதற்கு மகிழ்வுடன் அருணாசலம் அவர்களின் துணைவியார் இணங்கினார். ஆகவே Light from the East என்னும் நூல் 1927-ல் லண்டனில் வெளிவந்தது. இந்நூல் சைவசித்தாந்த தேன்பிளிற்றுகின்றது. கொழும்புத்துறை யோக சுவாமிகள் மெச்சிய நூல் இது.

பிரசுரிக்கப்படாத மடல்கள் மேலும் ஷெஃப்பீல்ட் மத்திய நூல்நிலையத்தில் இருக்கின்றன என்பதை அறிந்தோம். சில காலத்திற்கு முன் அங்கு சென்று அவற்றை 35 m.m: Film roll ஆக் எடுத்து வந்தோம். அந்த மடல் முடிவில் பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் யுவராக இருந்தபொழுது எடுக்கப்பட்ட நிழற்படமும் தமிழில் அவர் மருமகனின் கையொப்பத்துடன் [illegible] சேர்த்தோம். ஓர் [illegible] நடப்பு மலருக்கு (20-1-1980) அனுப்பி வைத்தோம்.

அருணாசலம் அவர்கள் தமிழ் கவிகளை நன்கு ரசித்துள்ளார்கள் என்பது அவர் எட்வேட் கார்ப்பென்ரருக்கு எழுதிய பிரசுரம் செய்யப்படாத கடிதங்களில் இருந்து அறியக் கிடக்கின்றது.

இலங்கை வேந்தரின் ஆசிய சபையாரின் ஏடுகளில் அவர் எழுதிய ஆய்வுக் கட்டுரைகள் சில உண்டு. J. R. A.S. (C.B) Voi. XXIV No,68, 1916.ல் பொலன்னறுவையில் கண்டு எடுக்கப்பட்ட வெண்கலங்கள் பற்றி தெளிவான விளக்கங்கள் எழுதியுள்ளார். 1910-ம் ஆண்டு அருணாசலம் அவர்கள் அவற்றைஅவற்றின்அணிகலன்களில் இருந்து தீர்மானித்துள்ளார் (Spoha Ceylonica Vol. 6.Paper XXII. Pages 66-69). இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள், திருஞானசம்பந் தமூர்த்தி சுவாமிகள் முதலியோரின் வெண்கலச் சிலைகள் தமிழ் நாட்டில் காணப்பட்ட அவற்றின் சிலைகளிலும் அமைப்பிலும் நனி சிறந்தன என்று அருணாசலம் அவர்கள்குறிப்பிட்டிருக்கின்றார், காலியில்உள்ள மும்மொழிகல்வெட்டில் கல்வெட்டில் தமிழ்மொழி காணப்படுகிறது. அதன் முக்கியத்தை ஒரு சொற்பொழிவில் விளக்கியுள்ளார்.

குடும்ப பாக்கியம்

1883-ம் ஆண்டிலே அருணாசலம் அவர்கள் பூர்வம் மானிப்பாய். மானிப்பாயிலிருந்து கொழும்பு-7. கறுவாக் காட்டுக்குக் குடியேறியுள்ள நமசிவாய முதலியாரின் புதல்வி சுவர்ணத்தை அருணாசலம் அவர்கள் திருமணம் செய்தார். அவர்களுக்கு எட்டுப் புத்திரர்களும், ஐந்து புத்திரிகளும்- புத்திரபாக்கியங்கள்.

மறைவு

1923-ம்ஆண்டு அருணாசலம் அவர்கள் தமிழ்நாட்டுக்குத் தலயாத்திரை செய்தனர்.

1924.ம் ஆண்டு ஜனவரி மாதம் 9-ம் திகதி மதுரையில் அவர் நடராஜப்பெருமானின் குஞ்சித பாத நிழலை அடைந்தனர். இன்று அவர் மறைந்து 55 ஆண்டுகள் சென்றுவிட்டன.

அவருடைய மக்களுள் பத்மநாபன் 1920-ம் ஆண்டிலும், இராமநாதன் 1939-ம் ஆண்டிலும், அவர் மகன் சேர் அருணாசலம் மகாதேவா 1969-ம் ஆண்டு ஜூன் மாதம் 9-ம் திகதியும்இறைவன் பாதத்தை நண்ணினர்.

இன்று அவர் இரு புத்திரிகள் உளர். அவர்கள் (1) சீமாட்டி பத்மாவதி பரராசசிங்கம். (II) சிவத்தொண்டர் திருமதிசிவானந்தன்தம்பையா அவர்கள். (இவர் கொழும்பிலே இலங்கைப் பல்கலைக்கழகத்து நீதித்துறைப் பேராசி [illegible] ரின் தாயார்.

நினைவுச் சின்னங்கள் உருவச்சிலைகள்

அருணாசலம் அவர்கள் மறைந்தபின், பொதுமக்கள் சேர் ஜேம்ஸ் பீரிஸ் அவர்கள் தலைமையில் 'அருணாசலம் உருவச்சிலைச்சபை' அருணாசலம் அவர்களின் உருவச்சிலையை அமைக்க ஏற்ற ஒழுங்குகள் செய்தனர். இதன் பயனாக 1930-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23-ம் திகதி அன்று இலங்கைப் பாராளுமன்றத்துச் சதுக்கத்தில் முதன்முதலாக அமைக்கப்பட்ட சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்களின் வெண்கல உருவச்சிலை திரை நீக்கம் செய்யப்பட்டது.

ஆண்டுதோறும் அருணாசலம் அவர்கள் மறைந்த தினமாகிய ஜனவரி 9-ம் திகதி கொழும்பிலுள்ள சங்கங்களின் சபைத் தலைவர்கள் சிலர் அருணாசலம் அவர்களின் உருவச்சிலைக்கு மலர்மாலை சூட்டிப் புகழ்மாலை சாற்றுவது வழக்கம். 1954-ம் ஆண்டு தொடக்கம் மேற்படி தினத்தில், வடகொழும்பு இந்து பரிபாலன சங்கத்தினர் அருணாசலம் அவர்களை கௌரவித்து வருகின்றனர்.

நினைவுச் சின்னங்கள்

அருணாசலம் அவர்கள் சற்ற 'ரோயல் கல்லூரி மண்டபத்திலும், இலங்கைச் சமூகப் பணிச்சபைஅலுவலகத்திலும், இலங்கைத் தேசிய காங்கிரஸ் அலுவலகத்திலும் அவர்களின் வர்ணமை ஓவியப் படங்கள் உள்ளன. 1951-ம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகம், மாணவர்கள் வசிக்கும் நிறுவனம் ஒன்றை 'அருணாசலம் விடுதி மண்டபம்' எனப் பெயரிட்டது.

அருணாசலம் அவர்கள் தமது மரணசாதன உயிலில் இலங்கைப் பல்கலைக்கழகத்துக்கெனப் பல அன்பளிப்புகள் விட்டனர். புலமை வாய்ந்த மாணவர்களுக்கு உயர்கல்வி கற்க உதவி நிதிகளும் செய்தனர். 1920-ம் ஆண்டு இங்கிலாந்திலே இயற்கை எய்திய பத்மநாபன் பெயரால், 1921ல் கொழும்பில் நிறுவப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி நூல்நிலையத்துக்கு மிக அரிய நூல்கள் வழங்கினர்.

1977-ம் ஆண்டு மார்ச் மாதம் 10-ம் திகதி இலங்கை அரசாங்கம் சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்களின்படத்தைப்பொறித்துள்ள ரூ. 1-00 முத்திரையை வெளியிட்டுள்ளனர்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தின் மாமணி சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்களை உன்னும்பொழுது அதே பல்கலைக்கழக மாமணிகளான இந்திய தேசிய காங்கிரஸ் தாபனத்தை நிறுவிய ஆனந்த மோகனதும், ஒப்பற்ற இந்திய தேசாபிமானி ஜவஹர்லால் நேருவினதும் நினைவு ஏற்படுகிறது. பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் நற்சீ தரணி எல்லாம் பரவுக!ஈழத் தமிழ்த்தாய் ஈன்ற ஒப்பற்ற அண்ணல் பொன்.அருணாசலம் நாமம் பல்லாண்டு வாழ்க!

(முற்றும்)

பாலர் அபிநயப்
பாடல்-7

ஆமை மாமா

ஆமை மாமா
அவசரம் இல்லை
என்று அசைகின்றீர்
ஆறுத லாகப்
போனால் போதும்
என்று நடக்கின்றீர்

●

மாமா மழை வெயில்
படாது என்று
மெதுவாய் அசைகின்றீர்
மனிதனைப் போல
அவசரம் வேண்டாம்
என்று நடக்கின்றீர்

●

அமைதி அடக்கம்
வெற்றிக்கு அறிகுறி
என்று அசைகின்றீர்
சுமை மிகக் கனத்தா
தூக்க மாட்டாமல்
துன்பப் படுகின்றீர்

—கல்வயல்
வே. குமாரசாமி

திருவள்ளுவரும் வள்ளுவமும்

(திருவள்ளுவர் குரு பூசை நாளை இடம்பெறுவதை முன்னிட்டு இக் கட்டுரை வெளிவருகிறது.)

தி. விசுவலிங்கம் பி. எஸ்ஸி.

திருவள்ளுவர் சென்னை மாநகர்க்குத் தெற்கே உள்ள மைலாப்பூரில் ஆதிபகவன் என்னும் தாய் தந்தையர்க்குப் புத்திரராக அவதரித்தார். உக்கிரகப் பெருவழுதி என்னும் மன்னன் மதுராபுரியைப் பரிபாலித்த காலத்தில், நாயனார் அவனாற் சன்மானிக்கப்பெற்று விளங்கினார் என்பர். திருவள்ளுவர் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் (கி. பி. 4-ம், 5-ம் நூற்றாண்டு என்றும் கொள்வர்) வாழ்ந்தவர் எனலாம். காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த மார்க்கசகாயன் என்பவரின் மகள் வாசுகியை வள்ளுவர் மணந்து இல்லறத்தை நல்லறமாக நடத்தினார். நெசவுத்தொழிலை மேற்கொண்டார். திருவள்ளுவரை நாயனார், தேவர் முதற்பாவலர், தெய்வப்புலவர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர் என்னும் பெயர்களால் அழைப்பர்.

நாயனார் திருக்குறளையும் சில தனிப்பாக்களையும் அருளிச்செய்தனரன்றி, வேறு நூல் யாதேனும் செய்ததாகத் தெரியவில்லை. திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் முப்பால்களையும், இல்லறவியல், துறவறவியல், அரசியல், அங்கவியல், ஒழிபியல், களவியல், கற்பியல் என்னும் ஏழு இயல்களையும், கடவுள் வாழ்த்து முதல் ஊடலுவகை என்ப தீறாகவுள்ள நூற்றிமுப்பத்து மூன்று அதிகாரங்களையும், ஆயிரத்து முந்நூற்றி முப்பது குறள்களையும் கொண்டது.

பொதுமறை

திருக்குறள் தமிழர்பெற்ற பெருஞ்செல்வம். தமிழ் மொழியில் உருவான பெருஞ் செல்வம். ஆயினும் அது உலகப் பொதுமறை.

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'

என மகாகவி பாரதியார் பாராட்டிப் பெருமைப்படுகிறார்.

நீதியினால் உலகில் எல்லோருக்கும் ஒத்த ஒரு பொது நெறி காட்டி நிற்பது திருக்குறளேயாகும்.

'வள்ளுவர் செய் திருக்குறளை
மறுவற நன்குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி
ஒரு குலத்துக்கொருநீதி'

என மனோன்மணியம் பகர்கின்றது.

குடி தழுவிக் கோலோச்சுதல் ஆட்சியாளர் கடன்.பகுத்துண்டு டல்லுயிரோம்புதல் பொருளுடையார் கடன். உழைப்பால் உயிர்வாழ்தல் உலகத்தோர் யாவரினதும்

(8ம் பக்கம் பார்க்க)

அரங்கும் அவையும்

நுண்கலைப் பிரிவு ஆரம்ப விழா

இசை நடனம் நாடகம் பற்றிய அறிவை - அவற்றின் நுட்பங்களை ஆழமாகக் கற்கும் வாய்ப்பினை மாணவர்க்கு அளிக்கும் வகையில், கல்வி இலாகா நான்கு கேந்திர ஸ்தானங்களில் நுண்கலைப் பிரிவுகளை ஆரம்பித்துள்ளது. வடக்கே இப்பிரிவு இராமநாதன் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டமை மகிழ்வுக்குரிய விடயமாகும். இதன் அங்குரார்ப்பண விழா மேற்படி கல்லூரியில், புதிதாய் அமைக்கப்பட்ட மண்டப அரங்கில் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் தலைமையில் கோலாகலமாக நடைபெற்றது.

மணிக்குரல்

கம்பீரமான தோற்றம்; மிடுக்கான ஒரு குரல், ஆமாம், வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் அவர்களின் மணிக்குரல் தான் அது.

''இன்றைய தினம் ஒரு பொன்னான தினம். சிறந்த அரசியல் ஞானியும், பெருமகனும், தமிழ்க் கலை கலாச்சாரம் ஈழத்திரு நாட்டில் கிளைவிட்டு தளிர் விட்டு செழித்திட வேண்டுமென மனதார விரும்பியவரும், ஆவன செய்தவருமான சேர் பொன் இராமநாதனின் இலட்சியக் கனவொன்று இன்று நனவாகிறது. இசை நடனம் நாடகம் என்பவற்றை மாணவர்கள் விரிவாக ஆழமாக முறையாகக் கற்கும் வாய்ப்பை கல்வி இலாகா எமக்கு அளிக்கிறது. 'ஓர் ஆணுக்கு ஒன்றைப் படிப்பித்தால் ஒரு நபருக்கு மட்டும் படிப்பிப்பதற்குச் சமம்; ஒரு பெண்ணுக்கு ஒன்றைக் கற்பித்தால் அது ஒரு குடும்பத்துக்கே கற்பிப்பதற்குச் சமம்' என இராமநாதன் முன் குறிப்பிட்டது ஞாபகத்துக்கு வருகிறது. இந்த நோக்கில் பார்க்கும் போது இந்த நுண்கலைப் பிரிவு இராமநாதன் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டிருப்பது மிகப் பொருத்தமான விடயமே. மாணவ உலகு இதனை நன்கு பயன்படுத்தி எமது கலைகளைப்பேண- மேம்படச் செய்ய முனைய வேண்டும்.'' - கரகோஷம் ஒலித்து ஓய்கிறது.

கலைப்பேரரசு ஏ.ரீ.பொன்னுத்துரை

குலத்துங்காவின் கூற்றில் இருந்து ...

நுண்கலைப் பிரிவு பொறுப்பதிகாரியாகக் கடமை ஏற்ற பின் முதற் கட்ட வேலையாக ஈழத்தின் பல பகுதிகளிலும், நுண்கலைப் பிரிவுகளை தனித்தும், கல்லூரிகளில் இணைத்தும் ஆரம்பித்துள்ளோம். மாணவர்கள் இசை நடனம் நாடகம் பற்றி கற்பதற்குச் சகல வசதிகளையும் கொண்ட பிரிவாக இது இயங்கும். தேவையான கலாகூடம். இசைக் கருவிகள் மற்றும் பல விரைவில் தரப்படும். மாணவர்கள் தாம் கற்கும் ஏனைய பாடங்களுடன் இசை, நடனம், நாடகம் பற்றிய நுணுக்கங்களையும் கற்றால் மேலாவாரியாக இவற்றை ரசிப்பதை விட, நுட்பமாகவும் சுவைக்க வாய்ப்பு ஏற்படும். இதற்கென அமர்த்தப்படும் ஆசிரியர்களை விட இச்சூழலில் வதியும் கலை வல்லுநர்கள், கிராமியக் கலை நிபுணர்கள் போன்றோரின் சேவைகளும் இணைக்கப்படும். விஞ்ஞானம் கற்கும் மாணவர்கள் கூட கலை அறிவை- நுகர்வை ஆழமாக்க இத்தகைய பிரிவுகள் துணை நிற்கும். ஆங்கிலத்தில் நிகழ்த்திய இவ்வுரை, அழகு தமிழில் சைவப்பெரியார் ஆர். என் சிவப்பிரகாசம் அவர்களால் கொடுக்கப்பட்டது, தொடர்ந்து உரையாற்றிய மானிப்பாய்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் அவர்கள், மகளிர்போல் ஆண்களும் கற்கும் வாய்ப்பை அளிக்கும் வகையில் நுண்கலைப்பிரிவு ஒன்று வேறு இடத்தில் அமைப்பது அவசியம் எனவும் குறிப்பிட்டார்.

கலை நிகழ்ச்சிகள்

யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவினர் அளித்த வசந்தோற்சவம், சிவன் உமை நடனங்கள் அன்றையகலைநிகழ்ச்சிகளின் சிகரங்களாயமைந்தன. வசந்தோற்சவத்தில் பங்குபற்றிய மாணவனும், சிவன் உமை நடனத்தில் பங்குபற்றிய மாணவிகளும் சிறப்பாக ஆடினர். கலைஞர் வேலானந்தன் நட்டுவாங்கம் பின்னணி இந்நிகழ்ச்சிகளை மெருகூட்டி, தூக்கிக்காட்டியது. இராமநாதன் கல்லூரியினர் அளித்த 'தில்லானா' நிகழ்ச்சியிலும் தூய்மையும் கலைச் செறிவும் மிளிர்ந்தன. இசை நிகழ்ச்சிகள் ஒத்திகை குறை வைக்காட்டின, எடுபடவில்லை. குரல் பயிற்சி அற்றவர்கள், பல்வேறு சுதிக்கு குரல்வளம் கொடுக்க முடியாதவர்கள் நிகழ்ச்சிகளை ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பதும் கலை நோக்கில் மெச்சக் கூடிய அம்சமல்ல, சங்கீத நடன ஆசிரியர்கள், நாடக வல்லுநர், கலை இலக்கிய முன்னோடிகள் பலர் சங்கமித்த இவ்விழா நல்ல ஒரு வெற்றிவிழா.

உத்திகள், குறியீகள் பற்றி, தா சிசியஸ்-

கடந்த வாரம் மகாஜனக் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தில் உரையாற்றிய நாடகக் கலைஞர் அ.தாசீசியஸ் கலந்துரையாடல் மூலம் பல விடயங்களுக்கு விளக்கம் கொடுத்தார்.

1. பொருத்தமாகவும் அளவாகவும் புதிய உத்திகளை நாடகத்தில் புகுத்தலாமே தவிர, தனக்குத் தெரிந்தது எல்லாவற்றையும் காட்டித் தீரவேண்டுமென்ற பண்டித மனப்பான்மை கூடாது.

2. ஆங்கிலப் புத்தகத்தில் படித்துவிட்டு அந்தப் பிரதேசத்துக்கு பொருத்தமாக உபயோகித்த குறியீடுகளை அப்படியே எமது மக்களுக்கு காட்ட முனையும் போதும் தோல்விதான் ஏற்படுகிறது. எமது வாழ்வில் இருந்தும், எமது பழையநாட்டுக் கூத்துக்கள் மற்றும் கலைவடிவங்களில் இருந்தும் எடுக்கப்படும் குறியீடுகள், உத்திகள் ரசிகர்களுக்கு இலகுவில் விளங்கும். 'புதிய [illegible] நாடகத்தில் திருமண நிகழ்வை நீட்டிக்காட்டவில்லை. மணமகன் கரங்கள், மணமகள் கரங்கள் ஒன்றன் மேல் ஒன்று நிற்பதுபோல். தொடாத முறையில் வைத்திருக்க வைத்து, பெரியவர் ஒருவரின் ஆசிகூறும் நிலை, சொரியப்படும் பூக்கள் என்பவற்றுடன் குறியீட்டு முறையில் காட்டி வெற்றி காண்போம். காத்திரமான கல் தூண் ஒருபுறம். இணைக்கப்பட்ட மூன்று மூங்கில் தடிகள் எதிர்புறம். இவற்றை இணைக்கும் வலு இழுக்கும் வடம். இந்தக்காட்சி அமைப்பு ஒரு குறியீட்டு முறையில் அமைந்தது. காத்திரமான கொடூரமான சம்மாட்டியை சுட்டுகிறது கல் தூண்; கூடி நிற்கும் மீனவர்களைக் காட்டுகிறது மூங்கில் தடிகள். இரண்டினையும் இணைக்கும் வடம், கயிறிழுப்பு போட்டிபோல் இருபகுதிக்கும் உள்ள போராட்டத்தை சுட்டுகின்றன. இப்படி குறியீடுகளை, உத்திகளைப் பொருத்த[illegible] வேண்டும்.

பல் வைத்தியம் - 5

போலி வைத்தியரிடம் பிழையான சிகிச்சை பெறுகின்றனர்!

பல்வைத்திய கலாநிதி **பா. சோ. பாரதி**

சென்ற வாரம் பற்சூத்தைகளும் அதன் விளைவுகளும்பற்றி விளக்கம் தரப்பட்டதுடன் பற்களைப் பாதுகாக்கப் பற்சூத்தை தொடங்கியவுடன் தகுந்த சிகிச்சை உரிய காலத்தில் செய்வித்தல் மிகவும் முக்கியம் என்றும் அறிவுறுத்தப்பட்டது. அரசினர் பல் வைத்தியசாலைகளிலோ அல்லது பல்வைத்திய கலாநிதிகளாகப் பட்டம் பெற்ற தனியார் பல்வைத்தியசாலைகளிலோ நோயாளிகள் அச்சமின்றித் தகுந்த சிகிச்சையை சிறந்த முறையிலே பெற முடிகிறது. ஆனல் இலங்கையில் பல இடங்களில் பல்வைத்தியத்தில் ஒருவித அறிவுமில்லாதவர்களான ''போலி வைத்தியர்களிடம்'' (Quacks) அல்லது ''பல் கட்டுமிடம்''என்ற போர்வையில் களவாக பல் வைத்தியம் செய்பவர்களிடம் பாமர மக்களும் சிலசமயம் படித்தவர்களும் சென்று பிழையான சிகிச்சை பெறுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அப்படிச் செல்வோர் பாரதூரமான இன்னல்களையும், பயங்கர விளைவுகளையும் அனுபவிக்க வேண்டியவர்களாகின்றனர். இப்படிப் பிழையான சிகிச்சை பெற்ற நூற்றுக் கணக்கானோரின் வாக்குமூலத்தாலும். எனது ஆராய்ச்சியாலும் நான் கண்டறிந்த அனுபவங்கள் பலவாகும்.

சில சமயம் பல்வைத்தியம் பற்றிய பொது அறிவில்லாத படித்தவர்களும் சென்று பிழையான சிகிச்சை பெறுகிறார்கள்- இந்தக் கட்டத்தில் நான் அனுபவவாயிலாகக் கண்டறிந்த போலிவைத்தியர்களின் நூற்றுக் கணக்கான சிகிச்சைக் குறைபாடுகளில் ஒன்றைக் குறிப்பிடுவது மிகவும் பொருத்தமானதாகும்.

அண்மையில் பீ. ஏ. பட்டதாரி ஒருவர் எனது வைத்தியசாலைக்கு வந்தார். கண்ணை மறைக்கும் வீக்கம் அவர் முகத்தில் தோற்றியது. சோதித்துப் பார்க்கையில் முன்வாய்ப் பற்கள் இரண்டிற்குமிடையில் ஏற்பட்டிருந்த சூத்தைக்கு பிழையான பல் அடைப்புச் செய்யப்பட்டதைக் கவனித்தேன். இதில் விசேடமென்னவென்றால் பல் அடைப்புக்குரிய சேர்வை பாவிக்கப்படாது செயற்கைப் பற்கள் (Artificial dentures) உடைந்தால் ஒட்டுவதற்குப் பாவிக்கப்படும் ஒருவகை மருந்துச் சேர்வையால் அடைப்புச் செய்யப்பட்டிருந்தது. போலி வைத்தியரின் பிழையான வைத்தியத்தைப் பற்றி அவருக்கு நான் போதித்தேன். அவர் படித்தவரல்லவா? முகத்திலே அசடு வழிந்தது. நனது அறிவீனமான செயலால் தன் இரு பற்களையும் இழக்க வேண்டிவந்ததை நினைத்து வெட்கப்பட்டார்.

ஆகவே பொதுமக்களுக்குப் பல்வைத்தியம் பற்றிய தெளிவான விளக்கம் இருத்தல் அவசியமாகிறது.

பிழையான பல் அடைப்புகள்:-

பிழையான போலி வைத்தியர்களால் அடைக்கப்படும் சிலகுறைபாடுகளை இங்கே குறிப்பிடுகிறேன்-

(1) பிழையான மருந்துகள் பாவித்தல். பற்சூத்தையைச் சுத்தப்படுத்தி தகுந்த மருந்தால் அடைக்காது பிழையான மருந்துகளால் அடைப்பதால் பற்களின் உணர்ச்சி நரம்புகள் தாக்கப்பட்டு பற்கொதி, வீக்கம் முதலியன உண்டாகிறது. பற்கள் பிடுங்கப்படவேண்டிய நிலையை உருவாக்குகிறது.

(2) பற்சூத்தையினல் பாதிப்புற்ற பழுதடைந்த இழையத்தை முற்றாக நீக்காது அதன் மேலே அடைப்புச் செய்தல்.

(3) இருபற்களுக்கிடையில் சூத்தையால் ஏற்பட்ட இரு குழிகளையும் (Inter Dental Caries) சேர்த்து ஒன்றாக அடைத்தல்.

(4) பழுதடைந்து பிடுங்க வேண்டிய பற்களுக்கு அடைப்புச் செய்தல்.

(5) விளிம்புகளின் அழுத்தத்தைக் கவனியாது மேலதிக அடைப்பு மருந்துச் சேர்வையை (Overhanging Filling) பற்களின் இடைவெளிகளிற் தங்க விடுதல்.

பல்சூழ் இழைய நோய்

(Periodontal Disease) பற்களையும் பற்களைத் தாங்கும் இழையங்களையும் தாக்கும் இன்னுமொரு நோய் பல்சூழ் இழைய நோய் எனப்படும்.

(6-ம் பக்கம் பார்க்க)

கச்சியப்பர் உவமை நயம்-8

சரவண பொய்கையில் சண்முகன்

வ. குகசர்மா

இமயமலைச் சாரலில் உள்ள ஒரு தடாகம். அதன் பெயர் சரவண தடாகம். அங்கே பல செந்தாமரை மலர்கள் காணப்பட்டன. அவற்றுள் ஒரு மலரில் முருகப்பெருமான் ஆறுமுகங்கள் கொண்டு வீற்றிருந்தார். உலகருள் கருணையோடும் வீற்றிருக்கும் பெருமானுக்கு சரவண தடாகம் பல விதமான சிறப்புகளைச் செய்ததாக சிறந்த உவமைகள் மூலம் விளக்குகிறார் கந்தபுராண நூலாசிரியர்.

பொய்கை நிழலில் அமர்ந்திருக்கும் முருகனை, ஊஞ்சல் ஆடுகின்ற முருகனைக் காட்டுகிறார் கச்சியப்பர். சரவண தடாகம் மஞ்சம். மலர் அதில் விரிக்கப்பெற்ற பாய். காற்று அசைக்க, ஊஞ்சல் ஆடுகின்றது.

''...தெண்ணீர்த்
தடமலர்ப் பாயலாகச்
சரவண மஞ்ச மீதில்
அடைதரு மைந்தன்
மென்கால் அசைப்ப
வீற்றிருந்
தானன்றே''

சரவண தடாகத்தில் ஊஞ்சல் அமைத்துக் காட்டிய ஆசிரியர் அந்தத் தடாகம் வழிபடு பண்பை மற்றிரு செய்யுட்களில் எடுத்துக் காட்டுகிறார். மங்கள காரியங்கள் நடக்கும் காலங்களில் ஆலாத்தி எடுத்தல் ஒரு மரபு. ஒரு தட்டத்திலே திரி இட்டுக் கொழுத்தி வலமாகச் சுற்றிக் காட்டுவர், இதனை நீராஞ்சனம் என்றும் சொல்வர். சரவண தடாகத்திலே தாமரை இலைகளின் மேல் பதன் அழிந்த தாமரை மலர் இதழ்கள் விழுகின்றன. அவை பச்சை நிறத்தட்டின் மேல் எரிகின்ற விளக்குப்போல காட்சியளிக்கின்றன. திரைகளாகிய கைகள் அந்த விளக்கை சுழற்றிக் காட்டுகின்றன.

''பங்கயச் செம்மற் போது
பதனழிந் தவிழ்ந்து
பாங்கர்
அங்குள இலைமேல் வீழ
அவைபுறத் தசையுந்
நீர்மை
சங்கரன் குமரற் சூழச்
சரவணம் பசும்பூந்
தட்டில்
துங்கநல் விளக்க மாட்டித்
திரைக்கையாற் சுலவல்
போலும்''

நீர் இறைவனை வழிபடுந் தன்மையை ஏனைய இரு புராணங்களும், அடியார்கள் பாடி திருமுறைகளும் கூறுகின்றன. திருவிளையாடற் புராணக் காட்சியொன்றை மேற்கோளாகப் பார்ப்போம். பொருநை நதி பாய்கின்றது. அந்த நதியின் வழியின் இரு மருங்கிலும் சிவாலயங்கள் பல உண்டு. அந்த நதி பாய்ந்து வருகிற பொழுது பால், தயிர், நெய் முதலிய பஞ்சகவ்வியங்களையும், தேன் மலர் ஆகிய பூசைக்குரிய பொருட்களையும்,

(6-ம் பக்கம் பார்க்க)

(புலவர்மணி சோ. இளமுருகனார் அவர்களின் ஞாபகார்த்த தினத்தையொட்டி காரைநகர் மணிவாசகர் சபையாரால் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதலாம் இடத்தைப்பெற்று தங்கப் பதக்கம் பெற்ற கவிதையின் இறுதிப் பகுதி)

இன்றமிழ் காத்த இளமுருகன்

யாத்தவர்: மதியழகன்

எழுவாயும் பயனிலையும் எதற்கோ என்பார்
இலக்கணத் தோடின்கவிதை இயற்றல் பாவம்
வழுவாமை இன்றியவர் வழுச்சொற் கூட்டி
வஞ்சகமாய்க் கவியாத்து மயக்கம் செய்வார்
அழுவாயும் அனல்நெஞ்சும் தாங்கா அன்னை
ஆற்றாது துடிதுடித்து ஐயோ வென்றே
கழுவாய்தான் காணவிழை கின்ற காலை
காதலொடும் இளமுருகன் காப்பே னென்றான்

●

செந்தமிழ்த்தேன் தெவிட்டுமட்டும் மாந்தி நின்று
சிந்தையிலே தனித்தமிழாம் மதுவே மீக்க
விந்தைமிகும் இளமுருகன் வீறு கொண்டு
விரவுதமிழ் மரபழிக்கும் வீணர்க் கெல்லாம்
எந்தைமீ தாணையிட்டேன் தமிழைக் காக்க
இனித்தயங்க மாட்டேனென் றேல மிட்டே
சந்ததமும் தமிழ்ப்பணியே குயிற்றி நின்றான்
சாற்றுவதென் அவனாற்றல் தரணி மீதே

●

அறைகூவி அபயமதை அளித்தான், அன்னை
அவலநிலை துடைத்திடவே எழுந்த செம்மல்
கறைதேடிக் களைவேனே கலங்காய் என்று
கலைச்சொற்கள் ஆயிரமாய்ச் சமைத்தான் நன்றே
குறைகூறிக் கொடுந்தமிழை வளர்ப்போர்க்
கெல்லாம்
கூற்றுவனாய்க் கண்டனங்கள் தொடுத்தே தந்தை
பிறைசேர்நற் சுந்தரனார் இட்ட பேரைப்
பிறங்கிடவே தனித்தமிழில் மாற்றி வைத்தான்

●

வேறு

இந்துமதம் இந்துக்கள் இவையென்ன வழக்கோ
இழிவுநிலை தமிழுக்கும் ஏன்வந்த தையோ
மந்தபுத்தி மாந்தரினால் வந்ததொரு மாயை
மாற்றிடவெ சீறிநின்றான் காவலனும் ஐயன்
செந்தமிழர் தனிநெறிகாண் சித்தாந்த சைவம்
சீர்திகழும் தனித்தமிழுக் கிணையேது மில்லை
சிந்தையெலாம் இந்தநினை வோடுமிள முருகன்
தீந்தமிழின் சிறுமைதனைத் தீர்த்ததிறம் வாழி

●

முக்கனியுஞ் சருக்கரையும் பாகும் நானும்
முத்தமிழின் தேன்பிலிற்றுஞ் சாற்றை யெல்லாம்
சொக்கனவன் நயந்தருளச் சுவையே சொட்ட
தூயதமிழ்ப் பனுவலிலே தேக்கி வைத்து
பக்குவமாய்த் தந்தனர்காண் புராணந் தானும்
பாரினிலே இவன்போலோ பாட வல்லார்
திக்கெட்டும் தெய்வமணம் பரப்புங் காரைத்
திருத்தலத்தின் மாண்பெல்லாஞ் செப்பி னானே

●

குற்றமிலாச் சொல்லாட்சி பொருளே மற்றும்
குலவுதமிழ் இனிமைநலம் குழைத்தே கூட்டிக்
கற்பனைக்கே எட்டாத வகையிற் செய்த
கவிஞரும் புராணமதைப் புலவோர் யாரும்
அற்புமாம் அற்புதமாம் ஈது தானும்
அம்பலவன் அருளென்றே அறைந்து நின்றார்
சிற்பரனார் சிதம்பரத்தை மறந்தே ஈழத்
திண்ணபுரம் அமர்ந்ததிலே வியப்பும் உண்டோ!

●

இன்றமிழை மாணியர்க்கீ தலிலே பாரி.
இம்மெனவே கவி செயலிற் காள மேகம்,
அன்புவிருந் தோம்புதலிற் காம தேனு,
அருந்தமிழைச் சிதைப்பார்க்குக் கீரன் பின்னும்
ஒன்றிறலாற் சைவத்தை வளர்க்கும் அப்பர்
வாழையடி வாழையென வந்த ஞானி
துன்பமிகு பிணிதன்னை வாட்டும் போதும்
தூயதமிழ் காத்தவிள முருகன் றானே

●

வேறு

தாய்மொழிக் கின்னல் செய்வோன்
தந்தையாய் இருந்திட் டாலும்
வாய்மையின் வழியில் நின்று
வருதிறன் ஆய்வு செய்து
காய்தலோ டுவத்தலின்றிக்
கன்னியாந் தமிழின் கற்பைத்
தூய்மையாய்க் காத்து வந்தான்
நல்லமகன் இவனே வாழி

●

ஓசையிற் பொருளிற் சொல்லில் ஒரு பிழை காணற்
குண்டோ
மாசறு கவிதை யாத்து யாவரும் மாந்த வைத்தான்
பேசிடும் இதர நாட்டுப் பிறமொழி கலவான் மன்னோ
ஈசனின் அருளால் ஈங்கண் இன்றமிழ் காத்த எம்மான்

●

தந்தையோ புலவர் கோமான் தம்பியர் கவிகள்
மேலும்
வந்தநன் மனைவி தானும் வழுவிலா உரையின் செல்வி
செந்தமிழ் அமிழ்தை மாந்தத் தினமெலாம்
புலவோர் ஈண்டிச்
சொந்த ஊர்க்கெழுதல் போலச் சூழுவார் நவாலி தன்னை

●

நாறுநற் சந்தனம்போல் நறுந்தமிழ்ச்சொற்கட் டேறல்
வீறுடு பொழிவராமால் விதந்தரு மேடை எங்கும்
ஏறியே செஞ்சொல்வெள்ளம் நிறைக்குமே இதய
வோடை
கூறவே மெய்சிலிர்க்குங் கோமகன் ஆற்றலம்மா

●

இனித்திடப் பூர ணன்றன் இன்கதை கவிதை யாக
பனித்திடக் கண்ணீர் மல்கிப் படிப்பவர் நகை
ததும்பத்
தனித்தமிழ் நடையிற் செய்தே தந்தனன் ஒழுக லாறு
தொனித்திட வேனில் விழவும் சுவைமிகப்
படைத்தான் அம்மா

●

பைந்தமிழ் மரபு காக்கப் பரிவுடன் சுருக்கெ ழுத்தைச்
சிந்தையிற் பதியும்வண்ணம் செய்தனன் சூத்தி ரங்கள்
சந்தவேள் காரணைகூட்டக் கலைச்சொற் களாக்கி
அன்னான்
செந்தமிழ்ச் செல்வத்தோடு செழுந்தமிழ் வழக்குந்
தந்தான்

●

முத்தமிழ்க் கடலின் மூழ்கி முதிர்ந்தசீர் மணிகள்
கொண்டு
சிற்பர நாரின்மீது சேர்ந்தநன் மதுரச்செய்யுள்
அற்புதம் அறிவர் யாரோ! அமைந்தமெய்ச் சுவையை
மாந்தின்
சிற்சபைக் கூத்தனாரின் சேவடி காண்பார் நன்றே

●

பொற்பத நாதன்மேலே பொழிந்த நான் மறையின்
சாறும்
அற்புதக் குறளின் தேனும் அடக்கியே பொதிந்து
மேலும்
கற்பனை ஊறிப் பாயுங் கம்பனின் யாப்புங் கூட்டி
நற்பத மாகத் தந்தான் நறுஞ்சுவை பிலிற்று தம்மா

●

தெய்வத் தமிழறிவுஞ் சிவநெறியின் நல்லுணர்வும்
ஐயந் திரிபறவே அறிந்துகற்ற ஆங்கிலமும்
கைவந் தருள்புரியக் கலங்கரையும் விளக்க மென
ஐயன் புலவர்மணி அரும்பணிகள் ஆற்றினனே!

●

வேறு

மறைந்ததந்தோ தமிழ்காத்த மனிதத் தெய்வம்
மனத்துயரை ஆற்றுதற்கு வழியும் உண்டோ
நிறைந்ததுவே அவனுவந்து தந்த செல்வம்
நெறிவழுவா மாணவரின் நெஞ்ச மெல்லாம்
உறைந்ததுவே அவனுருவம் உள்ளம் எங்கும்
ஊக்குவிக்கும் உணர்வளிக்கும் உண்மை ஈதால்
குறைந்ததுவே என்றநிலை மாறி நாளும்
குவலயத்தே தனித்தமிழும் வாழுங் கண்டீர்

●

இன்றமிழைக் காக்கவே எய்துபகை தாங்கி
மன்றுதொறுஞ் சென்றே மாபோம்பி-என்புநைந்து
நீர்வற்ற நாளெல்லாம் நின்ற இள முருகன்
[illegible]

(முற்றும்)

எல்லாமே உண்மையல்ல!

★ மோட்டார்வாகனத்தை முதன் முதலில் கண்டுபிடித்தவர் ஹென்றி போட் அல்ல; கார்ள் பென்ஸ் என்னும் ஜெர்மனியரால் 1885ல் உருவாக்கப்பட்டது.

★ வாழை மரம் உண்மையில் மரமேயல்ல. அதன் நடுப்பகுதிகூட தடித்த இலைகளே. பூத்த பின்பு—காய்த்த பின்பு அழிந்து போகும் செடி இது.

★ கரும்பிலிருந்து பெறப்படும் சீனி பீற் சீனியைவிட இனிமையான தென்றே நாம் பலரும் நம்புகிறோம். முறைப்படி நீற்றப்பட்டால் பீற் சீனியும், கரும்புச் சீனியும் ஒரே இனிமை யனவே.

★ கால் நடைகளுக்கு குறி சுடும் முறை மேற்கு நாட்டில் 19-ம் நூற்றாண்டில் தொடங்கியதென்பது சரியல்ல. 1644ல் 'கொனக்டிக்கட்'ல் இயற்றப்பட்ட கால் நடைகள், பன்றிகள் உட்பட குறி சுடப்பட்டு, பதிவு செய்யப்படவேண்டும் என்ற சட்டத்தை பின்னால் ஏனையோரும் தழுவினர்.

★ ஒட்டகம் ஒரே நேரத்தில் கனநீரைக் குடித்து வைத்துக்கொள்ளும் என்பது உண்மையே. கோடை காலத்தில் எட்டு நாட்களும், மாரிவேளையில் எட்டு கிழமைகளும் அது தண்ணீர் குடியாதிருக்கும். நீர்த்தொட்டி போன்ற தனி அறை ஒன்று அதன் உடலில் இருப்பதாகவும், நீருக்கென்று புறம்பான வயிறு இருப்பதாகவும், ஏரியில் தண்ணீரை தேக்கி வைக்கும் என்பதும் சரியல்ல. நீருக்கும் உணவுக்கும் வயிறு ஒன்று தான். ஒட்டகத்திற்கு வியர்வை வருவது குறைவு; சிறுநீர் கழிப்பதும் குறைவு. வாழும் சூழலுக்கேற்ப அது படைக்கப்பட்டிருப்பதும் விந்தை தான்.

★ இந்தியாவிலும் இங்கும் இருக்கும் சாதிமுறை இங்கேயே பிறந்ததல்ல... பஞ்சாப்பையும், இந்துபள்ளத்தாக்கையும் கைப்பற்றிய ஆரியரால் 3,700 ஆண்டுகளுக்கு முன்பு கொண்டுவரப்பட்டது இச்சாதிமுறை.

★ டிசம்பர் 25-ல் நத்தார் கொண்டாடுவதற்கு வரலாற்றுச்சான்று இல்லை. கிறிஸ்து ஆண்டு தொடங்கி பல ஆண்டுகளாகியும் டிசம்பர் 25 கிறிஸ்து பிறந்த நாளாக கொள்ளப்படவில்லை. பல திகதிகள் கடைப்பிடிக்கப்பட்டன. கி.பி 354 ல்தான் டிசம்பர்25 நிர்ணயிக்கப்பட்டது. இன்றும் கூட உலகில் எல்லா கிறித்தவராலும், டிசம்பர் 25, நத்தார் தினமாகக்கொண்டாடப்படுவதில்லை.

★ மணிக்கூட்டின் கம்பிகளை பின்னேக்கித் திருப்புதல் அதன் இயக்கத்திற்கு ஊறு விளைவிக்கும் என்பது உண்மையல்ல. பழைய மணிக்கூடுகளில் சில அப்படி இருந்திருக்கலாம். இன்றையவை அப்படியல்ல.

★ விமானக்கடத்தல் வீரர் என முதல்முதலில் பிரபல்யம் பெற்றவர் டி. பி. கூப்பர் என்பது தவறு. 727 ரக விமானத்தைக் கடத்தி இரண்டு இலட்சம்டாலர் கோரிப் பெற்றுக்கொண்டு, பாரசூட்மூலம் இறங்கிய இவ்வீரர் டான் கூப்பர்.

★ செப்பு வளையல், நரம்பு, வாய்வு வியாதிகளுக்கு நல்லதென்பதற்கு அறிவியல் ரீதியான சான்றில்லை. இது பழைய நம்பிக்கை. 17-ம் நூற்றாண்டிலும் இப்படியொரு வழக்கம் இருந்தது. சமீபத்தில் கனடாவிலும் இது பரவியது. மின்சாரம் பாய்ந்த செம்புக் கம்பியை இடுப்பில் கட்டுவதால் எந்த நோயும் மறையா.

★ குரங்கிலிருந்து தோன்றியவன் மனிதன் என்ற கோட்பாட்டை முதலில் கூறியவர் சாள்ஸ் டார்வின் என்பது உண்மையல்ல. 'உயிரினங்களின் தொடக்கம்' என்ற தனது நூலில் தனக்கு வழிகாட்டியாய் இருந்தவர் அரிஸ்டாட்டில் என்கிறார் டார்வின்.

★ நீரில் மூழ்கும் ஒருவன் மூன்று முறை மேலே வருவான்

(9-ம் பக்கம் பார்க்க)

போலி...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பற்குத்தைதயைப் போல இந்நோயாலே தாக்கமடைவோர் தொகை ஆண்டுதோறும் அதிகரித்து வருகின்றது. இக்கால வைத்திய முறையில் இந்நோயும் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. அன்றியும் நோயாளருக்குப் பெரிய விசாரத்தையும் உண்டாக்கி வருகின்றது. கடந்த காலத்தில் பல் சூழிழைய வருத்தத்தினுல் உண்டாகும் பல் இழப்பு (Tooth Loss) ஒருவருக்கு மூப்படைந்த நிலையில் நிகழ்வதாகக் கருதப்பட்டும் அனுபவத்திற் காணப்பட்டும் வந்தது. ஆனல் இன்று நமது வைத்திய அனுபவத்திற் காண்பது முழுவதும் வியப்புக்குரியதாக இருக்கின்றது,

(தொடரும்)

சரவண....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அள்ளிக்கொண்டு வரும். அவ்வாறு கொண்டுவரும் பொருட்களை சிவாலயங்களின் பாதங்களில் வீசிச் செல்கிறது. அது பூசை செய்கின்ற அடியார்களைப் போல விளங்குகின்றது.

''வல்லைதா யிருபால்
வைகுஞ் சிவாலய மருங்கு
மீண்டி
முல்லையா னைந்துந் தேனுந்
திரைக்கையான் முகந்து
வீசி
நல்லமான் மதஞ்சாந் தப்பி
நறுவிரை மலர்தூய
நீத்தம்
செல்லலாற் பூசைத்
தொண்டின் செல்வினை
மாக்கள் போலும்''

இதே வித வர்ணனையை கச்சியப்பர் கூறும்திறம், படித்து மகிழ்தற்குரியது. சந்தனம், தாமரை இதழ்கள், தேன் முதலிய பொருட்களையெல்லாம் அலைகள் வீசிக்கொண்டு வருகின்றன. தாமரை மலர் மேல் வீற்றிருக்கும் முருகப்பெருமானது திருவடியில் இப்பொருட்களையெல்லாம் அலைகள் என்னும் கரங்களால் கொண்டுவந்து சேர்த்தன. இக்காட்சி நீர்த்தடாகம் அன்பால் முருகப் பெருமானை வழிபடும் காட்சி போல இருக்கிறது.

'ஆரமும் வனசத் தோடும்
அணிமக ரந்தச் சேறும்
வேரியம் பூந்தண் தேனும்
முறைமுறை வீசிக்
கையாற்
சேரவே கொண்டு மேலோன்
திருவடி திளைப்ப உய்த்தல்
வாரியந் தடாகம் அன்பால்
வழிபடு வண்ணம்
போலும்''

அலர்ந்த தாமரை மலர் பொன்னுலாகிய காளாஞ்சி போலக் காட்சியளிக்கின்றது. மேலே எழுந்து நின்ற இலைகள் குடையாக இருந்தது. பல தாமரை மொட்டுகள் விளக்காக இருக்கின்றன. பறவை ஓசைகள் இனிய வாத்தியங்கள் ஒலிப்பதாக விளங்குகின்றது. அலைகள் சாமரையாக விளங்கியது. அந்தத் தடாகம் இவ்வாறு முருகப்பெருமானுக்கு சிறப்போடு அலங்காரங்களைக் கொடுத்தது.

''காசுறழ் பதுமப் போது
களாசிய தாக மீச்செல்
பாசிடை கவிகை யாகப்
பலநனை விளக்க மாக
வீசிகள் கவரி யாக
மிழற்றுபுள் ளியதமாக
மாசறு பொய்கை சேய்க்கு
ளம்பட ஒழுகிற்
றன்றே''

இலங்கையில் மத்திய வகுப்பின் தோற்றமும்வளர்ச்சியும்

மத்திய வகுப்பும் மேற்கத்தையமயமாக்கமும்

தி. வெற்றிவேலுப்பிள்ளை பி. ஏ. (சிறப்பு)

புதிய உயர்ந்தோர் குழாமில் ஆங்கிலக் கல்வியினால் ஏற்பட்ட விசேஷமான அம்சம் யாதெனில் மேற்கத்தைய கருத்துக்களையும், வாழ்க்கை முறைகளையும் பின்பற்றியமையாகும். 1832-ம் ஆண்டில் ஒருபிரித்தானிய அதிகாரி “இலங்கையே ஆசியா நடுகள் யாவற்றிலும் பார்க்க ஐரோப்பியப் பண்பாட்டை விதைப்பதற்கு ஏற்ற நாடு” என்று கூறினார். இலங்கையில் ஆங்கிலக் கல்லூரிகள் பெருமளவில் ஸ்தாபிக்கப்பட்டமை இவரின் கூற்றை நிரூபிப்பதற்கு சான்றாக உள்ளன.

பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் சிங்கள உயர்தர மத்திய வகுப்பினர். (Sinhalese Upper Middle Class) வேறெந்த ஆசியா நாட்டு மக்களிலும் பார்க்கக் கூடியளவு மேற்கத்தைய முறையைப் பின்பற்றி நாகரிகமடைந்திருந்தனர்.

இலங்கையில் வாழ்ந்த உயர்ந்தோர் குழாமானது நாகரிகமடைந்தமையினால், இலங்கையின் பழைய பண்பாட்டை அந்நியக் கண்கொண்டு நோக்கி வந்தனர். அத்துடன் இலங்கை மக்கள் பேசியதிலும் வேறுபட்ட ஒரு மொழியை இவர்கள் பேசி வந்தனர்.

ஆங்கிலங் கல்வி கற்ற அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அண்மைக்காலம்வரை இலங்கையின் தேசிய மொழிகளை தங்களுக்குத் தேவையான அளவுகூட விளங்கிக்கொள்ள முடியாதவர்களாக இருந்தார்கள். இதன் காரணமாகத் தங்களுடைய தாய்ப்பாஷையில் வரும் கடிதங்களை வாசித்து, மொழிபெயர்ப்பதற்கு ஒரு மொழிபெயர்ப்பாளனின் உதவியை நாடவேண்டியவர்களாக இருந்தார்கள்.

கண்டி திருத்துவக் கல்லூரி அதிபர் 1911ம் ஆண்டில் தனது கல்லூரியில் கல்வி பயின்றமாணவர்களில் அதிகமானோர் தங்களுடைய தாய்மொழியை பேசவோ, எழுதவோ முடியாத நிலையில் இருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது என்று கூறியுள்ளார்.

1911-ம் ஆண்டின் மதிப்பீட்டின்படி 2,000க்கு மேற்பட்ட இலங்கையர்கள் ஆங்கிலத்தை எழுத, வாசிக்க அறிந்திருந்தார்கள்.

ஆனால் அவர்கள் தங்களுடைய சொந்த மொழியை அறியாதவர்களாகக் காணப்பட்டார்கள்.

இவ்வுயர்ந்தோர் குழாம் ஆங்கிலத்தை வீட்டுமொழியாகப் பயன்படுத்தியது மட்டுமன்றி, மேற்கத்தைய பாணியில் வாழும்முறையையும் சேர்த்துக் கொண்டார்கள். இத்தாக்கமானது இன்றும் நமது சமுதாய அமைப்பில் இருந்து வருவதை நடைமுறையில் காணக்கூடியதாகவுள்ளது. ஆங்கிலக் கல்விகற்ற ஆண்கள் தமது தேசிய உடைகளைக் களைந்தெறிந்து, மேற்கத்தைய உடைகளான நீண்ட களிசான் (Trouser), சேட் (Shirt) போன்றவற்றை அணியத் தொடங்கினர் பெண்கள் சேலைகள் அணிவதைக் கைவிட்டு ஐரோப்பிய பாணியில் உடைகளை அணியத் தொடங்கினர்.

இவ்வாறு ஆடைகளில் ஏற்பட்ட இம் மாற்றமானது உயர்ந்த நிலைக்கு அவர்களை இட்டுச் செல்வதற்கும் வழிவகுப்பதாக அமைந்தது. ஐரோப்பிய பாணியில் உடையணிந்து, ஆங்கிலம் பேசத் தெரிந்தவர்களுக்கு சமூகத்திலும், பொதுமக்கள் மத்தியிலும் உயர்ந்த அந்தஸ்துக் கிடைத்தது.

மேற்கத்தைய முறையைப் பின்பற்றிய இலங்கையர்கள் ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களுடன் தாங்களும் சமமாக நிற்கத் தகுதியுடையவர்கள் என்பதை ஞாபகப் படுத்தியதுடன், ஐரோப்பியர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் தங்களுக்கும் அளிக்கப்படவேண்டுமென்று பிரித்தானிய அரசாங்கத்தைக் கோரிவந்தனர்.

கல்விகற்கும் நோக்கத்துடன் வெளிநாடுகளுக்குச் சென்ற மத்திய வகுப்பினர் இலங்கைக்குத் திரும்பும் பொழுது தாராண்மை வாதம், தேசிய வாதம், பொதுவுடைமை வாதம் போன்ற மேற்கத்தைய கருத்துக்களையும் கற்றுவந்து இலங்கையில் பிரித்தானிய அரசாங்கத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்யத் தொடங்கினர்.

ஆங்கிலேயக் கல்வி கற்ற மத்திய வகுப்பினர் மேற்கத்தைய பண்பாட்டினாலும், ஆங்கிலம் என்ற பொது மொழியினாலும் ஒன்றிணைக்கப்பட்டு சாதி, இன, மதங்களுக்கும் அப்பாற்பட்டவர்களாக 19-ம் நூற்றாண்டின் இரண்டாம் நடுக்கூற்றுப்பகுதியில் விளங்கினார்கள். அப்படியிருந்தும் சிங்களம், தமிழ் பேசும் சாதாரண மக்களுக்கும், மேற்கத்தையமயமான உயர்ந்தோர் குழாத்திற்குமிடையே கடுமையான பிளவு நிலவிவந்தது. இவ்வுயர்ந்தோர் குழாம் சாதாரண பொதுமக்கள் மத்தியிலிருந்து பிரிந்தே வாழ்ந்துவந்தது.

இதன் காரணமாக உயர்ந்தோர் குழாம் பிரித்தானிய அரசாங்கத்திற்கு எதிராக அரசியல் சீர்திருத்தம் வேண்டுமென்று கிளர்ச்சிசெய்தபொழுது, அதனால் வெகுஜன ஆதரவைப் பெறமுடியாதிருந்தது.

1867-ம் ஆண்டில் சட்டசபையில் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டபொழுதும், ஐரோப்பியருடனும் பறங்கியருடனும் சேர்ந்து ஆங்கிலக் கல்வி கற்ற சிங்களவரும், தமிழரும் யாப்புரீதியான சீர்திருத்தங்கள் வேண்டுமென்று பிரித்தானிய அரசாங்கத்தைக் கோரிக் கிளர்ச்சிசெய்தனர்.

1934-ம் ஆண்டு அமைக்கப்பட்ட இலங்கையின் முதலாவது அரசியல் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சிக்குத் தலைமைதாங்கியவர்கள் மேற்கத்தைய கல்விகற்ற, நகரத்திலிருந்துவந்த மத்திய வகுப்பினரேயாவர்.

பிரித்தானிய ஆட்சிக்குப் பின் இலங்கையில் இரண்டு வேறுபட்ட கல்விமுறையை ஒருவர் பெறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அவற்றில் ஒன்று ஆங்கிலக்கல்வி முறையானது சமூக, பொருளாதார, அரசியல்ரீதியில் ஓர் உயர்ந்தோர் குழாத்தை தயார்செய்ய உதவியது. மற்றது 'சுயபாஷா' (Swabasha) அல்லது 'தாய்மொழி' கல்வியானது தாழ்ந்த சமூக அந்தஸ்திலுள்ளவர்களினாலேயே பெறப்பட்டது.

அரசாங்க உத்தியோக மொழியாக ஆங்கிலமே 1956-ம் ஆண்டுவரை இருந்துவந்தது. 1920-1950-ம் ஆண்டிற்குமிடையில் பெருமளவு இலங்கையர் சிவில் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். 1920-ம் ஆண்டு தொடக்கம் ஆங்கிலமொழியைக் கற்று ஐரோப்பிய அறிவையும் தொழில் நுட்பத்தையும் அறிந்த உயர்கல்வி கற்ற இலங்கையருக்கு சிவில்சேவை உத்தியோகங்களைப் பிரித்தானிய அரசாங்கம் வழங்கியது.

சிங்கள மத்திய வகுப்பானது 1956-ம் ஆண்டில் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் தலைமையின் கீழ் ஒன்றுதிரண்டு 'சிங்களம் மட்டும்' என்ற சட்டத்தைக் கொண்டுவந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது. சிங்களமொழியைப் படிக்க விரும்பாதவர்கள் உத்தியோகங்களிலிருந்து இளைப்பாறும்படி கேட்கப்பட்டனர். இதன்பிரகாரம் சிங்களம் தெரியாத சிவில்சேவை உத்தியோகஸ்தர்கள் சிங்களம் படிக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளானார்கள்.

இவ்வாறு 1956-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 'சிங்களம் மட்டும்' என்ற சட்டமானது இலங்கையில் வாழ்ந்த சிங்களம் பேசாத மத்திய வகுப்பினர் மத்தியில் பெருமளவு தாக்கத்தை உத்தியோகம் சம்பந்தமாக ஏற்படுத்தியது என்றே கூறவேண்டும். இச்சட்டம் அமுல்செய்யப்பட்டதும் சிங்களத்தில் சித்தியடையாத மத்திய வகுப்பினர் பலர் தங்கள் உத்தியோகங்களிலிருந்து இளைப்பாற வேண்டி ஏற்பட்டது.

(தொடரும்)

அரசாங்க பிரசுர நூல்களின் வரிசையில்

“சிவராத்திரிச் சிறப்பு” கைந்நூல்

“சிவராத்திரிச் சிறப்பு” என்னும் கைநூல் இலங்கை பிரதேச அபிவிருத்தி இந்து சமயத் தமிழ்அலுவல் அமைச்சினால் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

ஸ்ரீ லஸ்ரீ ஆறுமுகநாவலர் இயற்றிய இரண்டாம் சைவ வினாவிடையை அடிப்படையாகக் கொண்டு, அந்நூலிலிருந்தே பெயர்த்தெடுக்கப்பட்டுள்ளவர்களால் சிவராத்திரியின் மகிமை மீளவும் நினைக்கப்பட்டு நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

“சிவராத்திரி வரலாறு” விரதம், அனுஷ்டிக்கும்முறை, விரதத்தால் பேறுபெற்றோர், இலிங்கோற்சவ மூர்த்தி; என்பனவற்றையும், சிவராத்திரி புராணத் “துதி” யையும், தமிழ்மொழியில் விளக்கியும் சிங்கள மொழியிலே, சிவராத்திரி விரதம், இலிங்கோற்பவமூர்த்தி, சிவராத்திரி என்பனபற்றி டீ. டீ. நாணயக்காரவினால் மொழிபெயர்க்கப்பட்ட கட்டுரைகளையும், ஆங்கில மொழியிலமைந்த இருகட்டுரைகளையும் கொண்டு மகா சிவராத்திரியின் பெருமை மிகுதத்துவங்களை விளக்குகின்றவகையிலே யாக்கப்பட்டுள்ளது இந்நூல்.

கந்தபுராணத்திலிருந்து 'அடிமுடி தேடு படலத்தை' மூலமாக எடுத்து, அப்படலத்திற்கு கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை செய்த உரையையும் இணைத்து நூலினைப் பெறுமதியுடையதாக ஆக்கியுள்ளனர்.

தமிழிலும் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் ஒரே விடயத்தை எழுத்துத்தரவாகக் கொள்ளவேண்டுமென்பதற்காகவும், [illegible] பிரச்சாரப்படுத்தும் [illegible] தொடக்க விழாவாகவுமே இக்கைந்நூல் வெளிவந்துள்ளதென்பதைஉணரமுடிகின்றது. எதுஎவ்வாறாயினும் இப்படியானதொரு நூலை வெளியிட்ட, பிரதேச அபிவிருத்தி இந்துசமய தமிழ் அலுவல்கள் அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை விசேடமாகச் சைவமக்களாற் பெரிதும் பாராட்டப்படவேண்டியவராவார்.

நூலின் பௌராணிக உள்ளடக்கத்தைக் குறிப்பாலேயே உணர்த்திவிடும் வகையில் அமைக்கப்பட்டுள்ள அட்டைப்படத்தின் “சோதி” வடிவத் தோற்றம் மிகவும் பொருத்தமாகவுள்ளதோடு, நூலின் தொனிப் பொருளைப் படிக்காமலேயே, நூல்பற்றியதொரு எண்ணப் படிமத்தை மானசீகமாகத் தோற்றுவிக்கும் தன்மையிலும் அமைக்கப்பட்டுள்ளது. -இதன் பக்கங்கள்81-

--நாவன்னா

●

நூல்: கந்தர் அநுபூதி உரையுடன்

உரை செய்தவர்: சுழிபுரம், யோகி க. கார்த்திகேசு.
வெளியீடு; வழக்கம்பரை சனசமுக பஜனைச்சபை.
விலை: ரூபா 4-00
அச்சுப்பதிவு: திருமகள் அழுத்தம், சுன்னாகம்.

அறிவுக்கும் நினைவுக்கும் எட்டாதவராகிய பரமசிவன் உலகம் உய்யக் கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டு வந்தாற்போல, கலியுகவரதனாக-கந்தவேளாக அமர்ந்து அருள் செய்கின்றார். எந்த வேளையிலும் கந்தவேளைச் சிந்தித்து வந்[illegible] [illegible] கந்தர் அநுபூதி, கந்தரலங்காரம், கந்தர் அந்தாதி, திருப்புகழ், கந்தபுராணம், கந்தசட்டி கவசம், திருமுருகாற்றுப்படை போன்ற அருள் நூல்கள் பல உள்ளன. இவற்றுள்ளே அளவில் சிறியதும், பாராயணம் செய்ய இலகுவானதும் சொற்சுவை, பொருட்சுவை, ஓசையினிமை உடையதும், மிகப்பலரின் நித்திய பாராயணத்துக்குரிய தாயிருப்பதுமாக விளங்குவது கந்தர் அநுபூதியே.

வாலிப வயதில், தகாத பாலியலுறவில் ஈடுபட்டுக் கொடுநோயுற்று வருந்திய அருணகிரிநாதர் வைராக்கிய பக்தி கொண்டபடியால் கந்தசுவாமியாரால் தடுத்தாட்கொள்ளப் பெற்றவர். கந்தவேள் ஆணைப்படி, அவரே அடியெடுத்து கொடுத்து அருள் புரியக் கடல்மடை திறந்தாற்போலத் திருப்புகழ் முதலான நூல்களைப்பாடியவர். தாம் பெற்ற திருவருட் செல்வமாகிய பேரின்ப அனுபவத்தை உலகமெல்லாம் பெற்று உய்ய வேண்டுமென்ற பெருங்கருணையினாலே கந்தர் அநுபூதி பாடியவர். இந்நூல் 51 கலிவிருத்தங்களையுடையது. சித்தாந்த சாத்திரப் பயிற்சிமிக்க அறிஞர்களுக்கேயன்றிச் சாதாரண மக்களுக்குப் புலப்படாத பொருளாழம் உடையது. இந்நூலைப் பொருளுணர்ந்து காதலால் ஓதுபவர்களே கந்தவேளின் திருவருட்பேற்றுக்குப் பாத்திரமாகுவர்.

கந்தர் அநுபூதிக்கு அறிஞர் பலர் உரையெழுதியுள்ளனர். சுழிபுரம் யோகி கார்த்திகேசனார் எழுதிய உரை, அருணகிரிநாதரின் உள்ளமறிந்து எழுதிய மெய்யுரையாக விளங்குகின்றது. ஏனையோர் தத்தம் சிற்றறிவுக்கு எட்டியவரையில் எழுதிய உரைகளிலும் பார்க்க, யோகியர் தம் அகக் கண்ணால் நோக்கி மெய்யுணர்ந்து எழுதிய உரை அற்புதமாய் உள்ளது. “முகத்துக் கண்கொண்டு காண்கின்ற மூடர்கள் அகத்துக் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்” என்பது திருமந்திரம். “நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்துருக”, “எல்லாமற என்னை இழந்தநலம் சொல்லாய்”, “அகமாடை மடந்தையர்என்றயரும் சகமாயை” “ஆறாறையும் நீத்ததன்மேல் நிலையைப் பேறா அடியேன் பெறுமாறுளதோ”, “திணியான மனோசிலை மீதுனதாள் அணியார் அரவிந்தம் அரும்புமதோ” என்ற தொடர்களுக்கு யோகியார் எழுதிய நுண்பொருள் விளக்கம் கற்குந்தோறும் கழிபேரின்பம் தருவதாகும். ஏனைய அறிஞர்களின் உரைகளிற் காணப்படாத அருமையான சிறப்புக்கள் யோகியார் உரையில் மிளிர்கின்றன. பெரியபுராணம், கந்த புராணம், திருவிளையாடற் புராணம், திருச்செந்தூர்ப்புராணம், காசிகண்டம், விநாயகபுராணம், திருவாதவூரடிகள் புராணம் போன்றவற்றுக்கு 45 ஆண்டுகளுக்கு மேலாக, யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலுமுள்ள கோவில்களில் உரை கூறிவரும் நியமம் உடையவர் அவர். யோகியார் கந்தபுராணம் முழுவதற்கும் உரை எழுதியுள்ளார். பெரியபுராணத்துக்கும் உரை எழுதியுள்ளார். கந்தபுராணம் யுத்த காண்டத்தின் பிற்பகுதி அவருரையோடு 71ஆம் ஆண்டில் கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை இந்துமாமன்ற வெளியீடாக வந்துள்ளது. ஒருவரின் தகுதியும் திறமையும் நன்றாக அறிந்தாலன்றி அவரைப் பாராட்டாத தமிழ் முனிவராகி இலக்கிய கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள், “யோகி கார்த்திகேசு அவர்கள் கந்த புராணத்துக்கு வசீகரிக்கத் தக்க முறையில் பொருள் சொல்லி வருகின்றார்கள் விஷயத்தில் ஈடுபட்டு உரைசொல்லுவது நெஞ்சைத் தொடுவதாயிருக்கின்றது” என்று பாராட்டிருக்கின்றார்கள்.

யோகியரின் உரைவிளக்கத்தில் 12 திருமுறைகள், 14 மெய்கண்ட சாஸ்திரங்கள், தாயுமானார், பட்டினத்தார் வைராக்கிய சதக நூலார்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கொரில்லா அரக்கன்

அத்தியாயம்-22

வி. சந்திரகுமார்

இளவரசியே தங்களை மீட்பதற்கு தங்களது உதவி தான் தேவை.

கொரில்லா அரக்கன் இன்று உணவருந்த வரும்போது நீங்கள் இந்த மயக்க மருந்தை மதுபானத்தில் கலந்துகொடுங்கள். சிறிதுநேரத்தில் கொடிய அரக்கன்மதிமயங்கி விடுவான். அந்தசச்மயம் அவன் எதைக் கேட்டாலும் மறைக்காமல் கூறிவிடுவான்! இதைப்பயன்படுத்தி நீங்கள் அவனை எவ்வாறு மரணமடையச் செய்யலாம் என கேட்டறிந்து என்னிடம் கூறினால் போதும்' எனக் கூறி மயக்க மருந்தையும் தீபாவிடம் கொடுத்தான் வேலன்.

முதலில்இதைக்கேட்டு தயங்கிய தீபா பின்னர் 'சரி'என ஒப்புக்கொண்டே 'வேலா! இப்பொழுது அரக்கன் வரும் நேரமாகிவிட்டது! நீ அதோ அங்கே மறைந்துகொள்! என எச்சரித்து வேலனை ஒரு மறைவிடத்தில் மறைந்துகொள்ளச் செய்தான்.

சிறிது நேரத்தில்... அவ்விடமே அதிர்ந்தது. அப்பொழுது பேரிரைச்சலிடையே அங்கே தோன்றினான் கொரில்லா அரக்கன்!

அவன் பலமாகச் சிரித்தவாறு... 'ஹா... ஹா ... பெண்ணே! இன்று இங்கு புதிய மனிதவாடை வீசுகிறதே? யார் இங்கு வந்தார்கள்...?' என தடித்த குரலில் வினவினான்.

இதைக்கேட்ட வேலன் அரக்கன் தன்னை கண்டுகொண்டானோ எனப் பயப்படலானான். ஆனால் தீபாவோ 'இல்லை மன்னா! இங்கு ஒருவரும் வரவில்லை. நீங்கள் நேற்று கொண்டு வந்த மான்இறைச்சியின் வாடையே!' என்று அநாயாசமாகக் கூறி மழுப்பினாள்.

இதே சமயம் மாளிகையின் வெளியே மறைவிடத்தில் இருந்த ஈசாப் குள்ளனும் நீண்டநேரமாகியும் வேலனைக் காணாதது கண்டு அவனுக்கு என்னமோ, ஏதோ எனப் பயந்தான்.

சிறிது நேரம் சென்றதும் அவன் மறைவிடத்தை விட்டு வெளியே வந்து கொரில்லா அரக்கனின் மாளிகையில் புகுந்து வேலனைத் தேடினான்.

கொரில்லா அரக்கன் இருப்பதை அறியாத ஈசாப் குள்ளன் தேடியவாறு உள்ளே வந்தான்.

குள்ளனைக்கண்டகொரில்லா அரக்கன் மறுகணமே 'ஹா ஹா...ஹா...'என பெரிதாகக் கத்தியவாறு 'இதோ... புதியவன்! ஹா.... எனக் கூறிக்கொண்டு ஈசாப் குள்ளன்மீது பாய்ந்து...தனது இடையில் இருந்த கூரிய கத்தியினால் ஈசாப் குள்ளனை பல துண்டங்களாக வெட்டினான்! இதனைக் கண்டு வேலனுக்கு இரத்தம் கொதித்தது. ஆனால்-வேலனோ ஒன்றும்செய்ய இயலாதவனாக இருந்தான்.

துண்டங்களாக வெட்டிய ஈசாப் குள்ளனின் உடலை ஒரு பெட்டியில் இட்டு மூடி ஒரு மூலையில் வைத்தான்!

(வளரும்)

மாணவர் எண்ணம்

'கண்டோஸ்'

கதாசிரியர் விளக்கம்

அன்புசால் மாணவமணிகளுக்கு,

சென்ற சிலகிழமைகளுக்கு முன் இடம்பெற்ற எனது தொடர்கதையான 'கொரில்லா அரக்கனில், சிறு தவறு ஏற்பட்டுள்ளது. இத்தவறு எனது கவனயீனத்தினாலும் கதையை எழுதி முடிக்க வேண்டுமென்ற அவசரத்தினாலுமே ஏற்பட்டது. இதுபோன்ற சிறு பிழைகளை தக்க சமயத்தில எடுத்துக்காட்டிய சகோதரிக்கு எனது நன்றிகள். சிறுதவறுகளை தக்க சமயத்தில் எடுத்துக்காட்டுவதால் என்போன்ற சிறு எழுத்தாளர்களுக்கு மேலும் பிழையின்றி, அழகுற கதை அமைக்க வழி வகுக்கும்,. 'கொரில்லா அரக்கன்' கதையேஎனதுமுதல் தொடர் கதையும்கூட! இது 1977-ல் எழுதியது.

மேலும் மாணவமணிகளிடமிருந்து 'கொரில்லா அரக்கன்' தொடர்பான கருத்துக்களை அவசியம் வரவேற்கிறேன்.

விளக்கம்:

ஒருநாள் வேலனின் கனவில் தோன்றிய அதிர்ஷ்ட தேவதை 'வேலா! மாய வீழ்ச்சியின் உச்சியில் மூன்று நீர் வீழ்ச்சிகள் ஒன்றுசேருகின்றன. அவை அவ்வாறு கலக்கு முன் நீ நடுவிலுள்ள வீழ்ச்சியில் உள்ள நீரைஎடுத்துவந்து அதனை உடலில் பூசிக்கொண்டு பயங்கர முதலைகள் நிறைந்த காவேரியாற்றினுள் தலைகீழாக குதிக்கும்போது 'சும் சக்கரீம்' என மூன்றுமுறை உச்சரித்து குதி. உன்னை அங்குள்ள முதலைகள் ஒன்றும் செய்யாது. பதிலுக்கு உன்னைக் கண்டு மாய நீரின் சக்தியினால் அவை உன்னைவிட்டு விலகிச் செல்லும். பின் நீகாவேரியாற்றின் வடகரைக்கு நீந்திச் செல். அங்குள்ள மாயவீழ்ச்சிக்கு கீழானமூன்றுமைல் நீளமான குகை தென்படும். அதனுள் பயங்கர மலைப்பாம்புகளும், ஓநாய்களும் இருக்கும். 'சும் சக்கரீம்' என உச்சரித்தவாறுசென்றால் அவை உன்னை ஒன்றும் செய்யாது. அதனூடே நீ மாயவெளியை அடையலாம். அங்குதான் கொரில்லா அரக்கனின் மாளிகையுண்டு' என கூறி அவனுக்கு அதிசய சக்தி வாய்ந்த வாளை கொடுத்து மறைகிறது.

தேவதை கூற்றுப்படியே எல்லாவற்றையும் அதிசயத்துடன்நோக்கியவாறு வேலன் சென்றுமாயவெளியை அடைகிறான்! அப்பொழுது ஈசாப் குள்ளன் தனது புஷ்பகவிமானத்துடன் வருகிறான்.

வி. சந்திரகுமார்

மாணவ மணிகளே!

உங்கள் எண்ணங்களுடனேயே மலர்ந்து கொண்டிருக்கும் மாணவர் எண்ணம் அவ்வப்போது நடைபெறும்விசேஷநிகழ்ச்சிகளின் சிறப்புமலராக வெளிவரவுள்ளது.

யாழ். நகரையே தன்பக்கம் திருப்பிவிடும் சென்றல்-சென் ஜோன்ஸ் கிரிக்கட் போட்டி நடைபெறவுள்ள வேளையில் 23 3-80ல் வெளிவரவுள்ள எண்ணம் 'கிரிக்கட் ஸ்பெஷலாக' வெளிவரவுள்ளது.

இந்த ஸ்பெஷல் எவ்வாறு உருவாகவேண்டும். எவ்வாறான அம்சங்கள் அதில் வெளிவரவேண்டும் என்பதையும் உங்களதுஎண்ணத்திற்கே விட்டுவிடுகிறேன்.

எங்கே 'ஸ்பெஷலுக்கான உங்களது எண்ணங்களை எழுதி இம்மாதம் 16-ம் திகதிக்கு முன்னர் எனக்கு அனுப்பிவிடுங்கள்.

இந்த ஸ்பெஷலில் கிரிக்கட்கேள்வி-பதிலும்' இடம்பெறும். உங்களது கேள்விகளை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புங்கள்.

விடயதானங்கள் சுருக்கமாகவே இருக்கட்டும்.

- கண்டோஸ்

'கிரிக்கட் ஸ்பெஷல்'
மாணவர் எண்ணம்,
ஈழநாடு,
யாழ்ப்பாணம்.

லீப் வருட நகைச்சுவை

மாணவன்: சேர் நான் 60-ம் ஆண்டு பிறந்தேன் இப்ப எனக்கு இப்பதான் 5 வயது!...

ஆசிரியர்: ஏன் பொய் சொல்லுறாய் அப்படியென்றால் உனக்கு இப்ப 20 வயதெல்லவா?

மாணவன்: இல்லை சேர். 60-ம் ஆண்டு லீப் வருடம் பெப்ரவரி 29-ம் திகதி பிறந்தேன். அதற்குப் பிறகு இந்த வருடம் தானே எனக்கு 5-வது பிறந்ததினம் வருகுது!...

ஒருவர்: நான் ஆரம்பிச்ச 'பக்டரி' தொடங்கிய பிறகு ஒழுங்காக ஆண்டு விழா கொண்டாடமுடியவில்லை பெரிய கரைச்சலாயிருக்கு!...

மற்றவர்; ஏன்?...?...

ஒருவர்: போன லீப் வருடம் பெப்ரவரி 29-ல் ஆரம்பித்தேன். இனி அடுத்த லீப் வருடம் பெப்ரவரி 29-ல் தான் ஆண்டுவிழா கொண்டாடலாம்!

கந்தர்: கடவுளே எனக்கு பிறக்கிற பிள்ளை இந்த வருடம் பெப்ரவரி 29-ல் பிறக்கவேண்டும்!...

சோமர்: ஏன் 29-ம் திகதி நல்ல நாளா!...

கந்தர்; இல்லை! லீப்வருடம் பெப்ரவரி 29-ல் பிறந்தால் 4 வருடத்திற்கு ஒரு தடவைதானே அதற்குப் பிறந்தநாள் விழாக் கொண்டாடவேண்டும். ஆகவே செலவு மிச்சம் தானே!

நீதிபதி: உனக்குத் தண்டனையாகச் சரியாக பெப்ரவரி 29-ல் இருந்து ஒரு வருட காலத்திற்குச் சிறைத்தண்டனை விதிக்கிறேன்.

குற்றவாளி; ஐயா 29-ம் திகதியை 28 ஆக மாற்றுங்கள்.

நீதிபதி: ஏன் ஒரு நாள் அதிகமாக இருக்க ஆசையா?

குற்றவாளி: இல்லை! இம்முறை லீப்வருடம ஆகவே அடுத்த பெப்ரவரி 29-ம் திகதி 4 வருடத்திற்குப் பின்புதானே வரும்!...

நடிகை: அந்த நடிகைக்கு நல்லதாப்போச்சு வயசை குறைச்சுச் சொன்னாலும் மற்றவர்கள் ஏற்றம் கொள்வார்கள்!...

நடிகர்: ஏன்?...?...

நடிகை: அவள் லீப் வருடம் பெப்ரவரி 29-ந் திகதி பிறந்ததனால் 4 வருடத்திற்கு ஒருதடவைதான் தனது வயதைக் கூட்டுகிறாள்!...

நடிகர்: ?...?...?...

ஒருவர்: நான் காதலிக்குக் கடிதம் எழுதும்போது 'உன்னைக் கடைசியாகக் கண்டு ஒரு வருடமாச்சு' என்று எழுதினேன் அவள் எனக்கு மூளை இல்லை என்டு என்னைக் கைவிட்டுட்டாள!...

மற்றவர்: ஏன்?

ஒருவர்: கடைசியா லீப் வருடம் பெப்ரவரி 29-ல் சந்தித்தேன். அதற்குப் பிறகு இன்னமும் பெப்ரவரி 29-ம் திகதி வரவில்லையே!...

-வி. இந்துமதி
(வேம்படி மகளிர் கல்லூரி)

பாணே எனை ஏனோ தவிக்கவிட்டாய்?

பாணே எங்கு சென்றாய்.
நாம்
பார்த்தே ஏங்குகின்றோம்
வீணே நீ மறைந்தாய்.
பலர்
விம்மி அழுகின்றோம்
காணோம் உன்னைஎங்குப் -
பசி
காதை அடைக்கிறது
ஊணே உன்னையல்லால்
-வேறு
உள்ளே செல்லுதில்லை.

பனாட்டை நாம் விடுந்
தோம்-அதை
பழித்தே ஒதுக்கிவிட்
டோம்
மேனாட்டுண வென்பதால்
- உன்னை
மேன்மை என நினைத்
தோம்
தேனும் நம் நாட்டில்- பல
தீஞ்சுவை உண்டி உள
வீணாய் அவற்றை
எல்லாம்-நாம்
விட்டே உனை அடைந்
தோம்,

உன்னை இனி எங்கே-நாம்
உண்டு மகிழ்வோமோ
கண்ணே உன்னையல்லால்
-எம்
கவலை தணிப்பவர் யார்
பெண்ணே நீ இன்றேல்,
எங்கள்
பேச்சும் இனிக்காதே
என்னே உன் செய்கை
எம்மை
ஏனோ தவிக்கவிட்டாய்?

மு. தங்கத்துரை,
க. பொ. உயர்தரம்,
திரு இருதயக்கல்லூரி,
கரவெட்டி.

பாலர் அபிநயப்பாடல்:

நல்லோராக வாழுவோம்!

பாலர் நாங்கள் பாடுவோம்
பாடிப் பாடி ஆடுவோம்
காலமெல்லாம் இன்பமாய்
களித்து ஒன்றாய் வாழுவோம்!...(பாலர்)

●

அன்னை தந்தை தெய்வமென்று
அனுதினமும் வணங்குவோம்
சொன்ன சொல்லைத் தட்டிடாது
தூய வாழ்வு வாழுவோம்!...(பாலர்)

●

பள்ளிக்கூடம் சென்று நல்ல
பாடங்களைப் பயிலுவோம்
கள்ளங் கபடமின்றி நாளும்
கற்று நன்மை எய்துவோம்!...(பாலர்)

●

உலகை நாளை ஆளப்போகும்
உத்தமர்கள் நாமன்றோ?
நலமாயிங்கு நாடு போற்ற
நல்லோராக வாழுவோம்!...(பாலர்)

-கீழ்கரவை கி. குலசேகரன்

திருவள்ளுவரும் வள்ளுவமும்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கடன். உலகத்து மக்கள் எல்லாரும் கருமத்தில் கண்ணாயிருத்தல்வேண்டும் என்பதே திருவள்ளுவரின் தலையாய வேண்டுகோள்.

திருக்குறள் ஓர் அறிவுச்சுரங்கம், அஃது ஊருணி நீர் நிறைந்தாற் போன்றது. கொள்வாரின் அறிவுக்கும், ஆற்றலுக்குந் தேவைக்குந் தக்கவாறு அதன் பொருள் புலப்படும்.

இன்று தமிழறிந்த வெளிநாட்டாரும், திருக்குறளின் திறனறிந்து அதனைத் தத்தம் மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிடமுன்வந்துள்ளனர். இந்நிலையில் திருவள்ளுவரின் தமிழைத் தாய்மொழியாகப் பெற்ற பாக்கியத்துக்காக திருக்குறளின் உட்கருத்துக்களை-வள்ளுவத்தை உலகோர் அறியும்வண்ணம் பரப்புதல் வேண்டும்.

'வள்ளுவன் புகழை வையக
மெல்லாம்
வாரியிறையடா தமிழா'

என்னும் வீரத்தமிழன்வேண்டுகோளை நிறைவேற்றவேண்டியது தமிழராகிய நம் எல்லோரினதும் கடனாகும்.

'வள்ளுவர் பாட்டின் வள
முரைக்கின் வாய்மடுக்கும்
தெள்ளமுதின் தீஞ்சுவையும்
ஒவ்வாதால் - தெள்ளமுதம்
உண்டறிவார் தேவர்
உலகடைய உண்ணுமால்
வண்டமிழின் முப்பால்
மகிழ்ந்து'

'முப்பாலின் மிக்க மொழி
யுண் டெனப்பகர்வார்
எப்பாவலரினும் இல்'

'அப்பால் ஒரு பாவை
ஆய்பவோ வள்ளுவனார்
முப்பால் மொழிமூழ்குவார்'
'எப்பாவலரும் இயைபவே
வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி'

'வாழியரோ,
தெள்ளுகுறட் செந்தேன்
செவிகுளிரப் பெய்திரு
வள்ளுவனார் பாதமலர்.

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி: 4 காட்சிகள்
கமலஹாசன்—சிவகுமார்—பிரமிளா
அரங்கேற்றம்

வின்ஸர் 2வது ஜனத்திரள் வாரம்!
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, பி. ப. 2-30, 6-15, இரவு 9-30
நாகேஷ்-முத்துராமன்-ஜெயந்தி-சௌகார் ஜானகி
சுந்தரராஜன் நடித்த
"எதிர் நீச்சல்" (புதிய பிரதி)
இயக்குநர் திலகம் K. பாலசந்தரின் மற்றுமோர் வெற்றிப்படைப்பு. நீண்டகால இடைவெளியின்பின் யாழ். நகரில் திரையிடப்படும் தரமான ஒப்பற்ற காவியம். நாகேஷின் நடிப்புக்கு ஒரு எடுத்துக்காட்டு கண்டு களியுங்கள்.

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா
கவிதா - சந்திரமோஹன்
நடித்த
ஜெனரல் சக்கரவர்த்தி
(ஈஸ்மன்ட் கலர்)

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சஞ்சீர் (ஹிந்தி) SANJEER

லிடோ தினசரி: 10-30, 2-30, 6-30 & 9-30
(யாழ்.நகர்) போன்: 7693
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
கணவன்

REGAL 2nd Crowded Week
JAFFNA. Phone: 36
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 p.m. only
"THE FLESH AND BLOOD SHOW"
உல்லாசக் கேளிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் இளம் நாடகக் குழுவில் தொடர்ந்து பல கொலைகள் நடக்கத் தொடங்குவதன் மர்மத்தைக் காண இன்றே விரையுங்கள்.
திகில் – காதல் – மர்மம் நிறைந்தது
(கண்டிப்பாக வயது வந்தவர் மட்டும்)
LOVE SEX TOGETHER WITH MURDERS AND THRILL - STRICTLY FOR ADULTS

SANTHI JAFFNA Phone: 7642
DAILY 10-30, a.m. 2-30, 4-45, 7-00 & 9-30 P.M.
A Hilarious Action Comedy
Treat For The Entire Family...
Exciting...Fantastic...Thrilling...Enjoyable
Much Better than 'CRIME BUSTERS'
BUD SPENCER...TERENCE HILL
WATCH OUT WE'RE MAD!-COLOR

ராணி (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
இல்லறம் இன்பமாக விளங்க "இருவர் உள்ளம்"
இணைய வேண்டிய அவசியத்தை விளக்கும்
இணையற்ற குடும்பச் சித்திரம்
சிவாஜி கணேசன்-சரோஜாதேவி-எம்.ஆர். ராதா
பாலாஜி-ரங்கராவ் இன்னும் பலர் நடித்த
இருவர் உள்ளம்
(புதிய பிரதி)
திரைக்கதை வசனம்: கலைஞர் கருணாநிதி

ஸ்ரீதர் -யாழ். நகர் தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-30
கமலஹாசன், ஸ்ரீதேவி, ரஜனிகாந்த்
Y விஜயா நடித்த
மூன்று முடிச்சு (புதிய பிரதி)
குறிப்பிட்ட நாட்கள் மட்டும்
Coming Soon: THAT MAN BOLT
THE DON IS DEAD

எல்லாமே

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

என்பது உண்மையல்ல. அவன் எத்தனத்தை பொறுத்து எத்தனை தடவையும் வரலாம். ஒரேமுறையில் மூழ்கிலும் மூழ்கலாம்,

★ வெள்ளை ஓட்டு முட்டைக்கும் ஊதாநிற முட்டைக்கும் வேறுபாடே இல்லை. விலை வேறுபாட்டுக்கு வியாபாரப் பிரச்சாரமே காரணம்.

★ உலகில் அதி உயர்ந்த மலை எவறெஸ்ற் என்பது உண்மையல்ல. கடல் மட்டத்திலிருந்து' என்ற கணக்கை விட்டு' 'நிலமட்டத்திலிருந்து' கணிக்கப்படின் 29.028 அடி உயரமான எவறெஸ்ற்றைவிட 20,561அடிஉயர சிம்பராஸோ மலை இரண்டுமைல் உயரம் கூட.

★ மனிதனை ஏற்றிப்பறந்த முதல் விமானத்தை உருவாக்கியவர் றைற் சகோதரர்கள். ஆயினும் அவருக்கு முன்பே வாங்வி என்பவர் ஒரு விமானத்தை பறக்கவிட்டு, பின்னால் அது மனிதனை ஏற்றிச் செல்லும் என்ற தீர்க்கதரிசனத்தை மறக்கமுடியாது.

★ பறக்கும் மீன்கள் உண்மையில் பறப்பதில்லை.

அவை துள்ளும். இதேபோலத்தான் அணில்களும்.

★ ஜெர்மன் வெள்ளியில் வெள்ளியே இல்லை, செப்புத் தகரமும் நிக்கலும் சேர்ந்தது இது.

★ கொரிலா நாம் நம்புவதுபோல் பயங்கரமான மிருகமல்ல. இலைகுழைகளையே உண்ணும், சாதுவான, அமைதியான மிருகமிது.

★ 'மக்களாட்சி. மக்களால் மக்களுக்காக' இதைக் கூறியவர் லிங்கன் என்பது பிரபல்யம். ஆனால் தியோடோர் பாக்கர் -எல்லோருக்கும், எல்லாராலும் இயக்கப்படும், ஆட்சி? என்று லிங்கனுக்கு முன்பே சொல்லிவிட்டார்.

★ மின்குமிழ் கண்டுபிடித்தவர் எடிசன் என்பது உண்மையல்ல. அவருக்கு முன்பு பலர் வகுத்த கொள்கைப்படி மின்குமிழை விருத்திசெய்தவர் எடிசன். எடிசன் பிறக்கு முன்பே 1802ல் ஹம்பிறி டேவி என்பார் ஒரு மின்வலையை உருவாக்கினார்.

★ உலகின் மிகப் பழைய நகரம் ரோம் என்பது சரியல்ல. இது கி. பி. 753-ல் கட்டப்பட்டது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே டமாஸ்கஸ் நகரம் இருந்ததாகச் சொல்லப்படுகின்றது.

★ அரிசிக் கடுதாசி அரிசியில் செய்ததல்ல. அரிசித்தாள் மரம் எனும் ஒரு சிறு மரத்தின் சோத்தியில் செய்யப்படுகின்றது.

★ சாடின் தகரத்தில் இருப்பது சாடின் மீன் அல்ல: அப்படியொரு மீன் இல்லை. வேறுவகை மீன்கள் அதில் அடைக்கப்படுகின்றன.

(உதவி' டிக்ஷனரி ஒவ் மிஸ்ன் போர்மேஜன்)

தொகுப்பு'
எஸ். பி- கே!

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
கமலஹாசன்- ஸ்ரீவித்யா
ஆசை அறுபதுநாள்

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர்.-அஞ்சலிதேவி
மர்மயோகி
(புதிய பிரதி)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
வீரக்கனல்

துப்பாக்கிக் கொள்ளைவழக்கு:

2-ம் எதிரி கோர்ட்டில் சரண்

பழைய பிணையில் செல்ல அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். துப்பாக்கி கொள்ளை வழக்கில் இரண்டாம் எதிரி நேற்று யாழ் மேலதிக நீதவான் கே. எஸ். மகேசன் முன்னிலையில் சரணடைந்தார். அவரை பழைய பிணையில் செல்ல நீதவான் அனுமதித்தார்.

இவ்வழக்கில் 77 நவம்பர் 29-ம் தேதி உரும்பராயைச் சேர்ந்த அ. குலநாயகம் வீட்டிற்குள் புகுந்து அவரைக் கொலைசெய்வதாக பயமுறுத்தி அவருக்குச் சொந்தமான 1500 ரூபா பெறுமதியான துவக்கை கொள்ளையடித்ததாகவும், குலநாயகம் வீட்டில் கொள்ளையடித்த துவக்கை திருட்டுப் பொருள் என்று தெரிந்தும், வைத்திருந்ததாகவும் அ. பாஸ்கரன், கு. சுந்தரலிங்கம், சி. ஜெயக்குமார், ஜெ. அந்தோனிப்பிள்ளை, த. ரவீந்திரன் ஆகியோர் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் ஐவரும் ஏற்கனவே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர். கடந்த தவணையின் போது 2-ம் எதிரி கோட்டிற்கு வராததினால் அவருக்கு வாரண்ட் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

2-ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி கனகசபாபதி கடந்த தவணையின் போது 2-ம் எதிரி வேறு ஒருவழக்குத்தொடர்பாகசென்றிருந்ததால் இங்கு வரவில்லையென்றும் அவரைப் பிணையில் செல்ல அனுமதிக்குமாறும் கோரினார். நீதவான் 2-ம் எதிரியை பணப்பிணையில் செல்ல அனுமதித்தார். 5 எதிரிகளும் கோட்டிற்கு வந்திருந்தனர்.

விசாரணை மே மாதம் 2-ம் தேதிக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது. (க)

சிவராத்திரி

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

போன்ற மெய்யடியார்களின் பாடல்கள் மிகப் பொருத்தமாக மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.

''உருவாய் அருவாய் உள
தாய் இலதாய்
மருவாய் மலராய் மணி
யாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதி
யாய் விதியாய்க்
குருவாய் வாருவாய் அருள்
வாய் குகனே'' என்ற

பாடலுக்கு அவர் இரண்டு விதமாகப் பொருள் கூறியுள்ளார்.

ஒன்று:- உருவப் பொருளாயும், அருவப் பொருளாயும், உள்ளபொருளாயும், காணமுடியாத பொருளாயும். நறுமணமாயும், நறுமணங் கமழும் மலராயும், இத்தினமாயும். அதன் ஒளியாயும், முத்திப் பொருளாயும், அதையடையவிருக்கும் சாத்திர விதியாயும், குருவாயும் தோன்றுகின்ற எம்பெருமானே, குகனே, சற்குரு மூர்த்தியாக வந்து அடியேனுக்கு அருள் புரிவீராக.

மற்றது:- உருவமாயும் அருவமாயும்முள் பொருளாயுமுள்ள பிரபஞ்சமே திருமேனியாம்படி நின்றும், பொருட்டன்மையால் அதனைக் கடந்து நின்றும், மலரும் மணமும் போல் பிரபஞ்சத்தில் வியாபித்து நின்றும், ஒளியும் இரத்தினமும் போன்று உள்ளிருந்தும், அப்பிரபஞ்சம் அடங்கியிருந்து தோன்றுதற்குக் காரணமாயிருந்தும், சித்துப் பிரபஞ்சத்தை இயக்குதலினால் உயிர்க்குயிராய் இருந்தும், அவ்வுயிர்கள் அடைகின்ற முத்திப்பேரும்படி நின்றும், உயிர்வர்க்கம் முத்தியடைவதற்கேற்ற விதிகளை விதிக்கின்ற வேதசிவாகமங்களான சத்தப் பிரபஞ்சமாயிருந்தும், உயிர்களை உபகரித்துப் பக்குவம் வந்த காலத்திலே பரம சற்குருநாதராய் எழுந்தருளி வருகின்ற குகப் பெருமானே! அடியேனுக்கும் திருவருள் செய்ய வேண்டும்.

இனி, ''அறிவொன்றற நின்
றறிவார் அறிவில்
பிறிவொன்றற நின்ற
பிரான் என்ற

அடிகளின் நுண்பொருளை விளக்கும் பொழுது, அறிவு ஒன்றற நின்று அறிதல்- கருவி கரணங்களோடு கூடியறியும் சகலமும், அவற்றைக் கூடாமல் நிற்கின்ற கேவலமும் இன்றிச் சுத்தாவத்தை எய்தி நின்று அறிதல்; அறிவில் பிறிவு ஒன்று அற நிற்றல்- ஒன்றும் வேறும் உடனும் நிற்றல். கலப்பினால் ஒன்றும் பொருடன்மையால் வேறும், செலுத்துதலால் உடனும் என அறிக எனத் தெளிவுபடுத்தும் திறம் பாராட்டத் தக்கது.

இவ்வுரை நூல் வழக்கம் பறை பஜனைச் சபையாரால் சுன்னாகம் திருமகள் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப் பெற்றது. சுத்தமான அழகான பதிப்பு.

--அருட்புலவர் பண்டிதர்
-அ. ஆறுமுகம்

......

விளையாட்டு மைதானம்

(யாழ்ப்பாணம்)

தேசிய சேவை இளைஞர் மன்றத்தின் ஆதரவுடன் சாவகச்சேரித் தொகுதிக்கான பொது விளையாட்டுத்திடல் அமைக்கும் வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் 50 க்கதிகமான இளைஞர்களும், யுவதிகளும் கலந்து கொள்வார்கள்.

இத்திட்டத்தினைப் பூர்த்தி செய்வதற்கு தேசிய சேவை இளைஞர் மன்றம் ஒரு இலட்சம் ரூபா ஒதுக்கியுள்ளது. இன்று ஞாயிற்றுக்கிழமை காலை இத்திட்டத்தில் நடைபெறவுள்ள சிரமதான வேலையில் பாராளுமன்ற உறுப்பினர், உதவி அரசாங்க அதிபர்கள், நகரசபைத் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் பல பொதுஸ்தாபனங்கள் ஆகியன பங்குபற்றவுள்ளன. (சே)

......

ஆலோசனைக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

இலங்கை இந்து இளைஞர் பேரவை, யாழ். மாவட்ட அபிவிருத்தி சம்பந்தமாக ஆலோசனைக் கூட்ட மொன்றை நடாத்தத்தீர்மானித்துள்ளது.

இக்கூட்டத்திற்கு யாழ். மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு இந்து இளைஞர் மன்றத்திலிருந்தும் இருபிரதிநிதிகளை அழைக்கத் தீர்மானித்துள்ளதாக இலங்கை இந்து இளைஞர் பேரவைத் தலைவர் தெரிவித்தார்.

இதுசம்பந்தமான மேலதிக விபரங்களுக்குத் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு இலங்கை இந்து இளைஞர் பேரவைத் தலைவர் கேட்டுள்ளார். [வெ]

......

பாரதி வி. கழகம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை வட்டார வலிகாமம் மேற்கு உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் அராலி வடக்கு, பாரதி விளையாட்டுக் கழகத்துக்கும் அராலி தெற்கு, நிலாஒளி விளையாட்டுக் கழகத்துக்குமிடையே நடந்த உதைபந்தாட்டத்தில் பாரதி விளையாட்டுக் கழகம் இரண்டு கோல்களை அடித்து வெற்றியீட்டியது. இவ்விளையாட்டுப் போட்டியின் நடுவராக திரு. ச. அண்ணாத்துரை கடமையாற்றினார். பாரதி விளையாட்டுக் கழகத்தின் குழுத் தலைவராக க. பேரழகன் கடமையாற்றினார். சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் இந்த உதைபந்தாட்டம் இடம் பெற்றது. (நா)

அனைவரும் ஆவலுடன்
எதிர்பார்த்த நிகழ்ச்சி இன்று
நடைபெறுகிறது.
ஆழிக்குமரன் ஆனந்தனுடன்
ஒரு மாலைப்பொழுது...
பிரெஞ்சுப் பாடகி உட்பட
6 பெண் பாடகிகளுடன்
ஆனந்தன் பாடுகிறார்...
அத்துடன் கராட்டி, யூடோ,
அறிவிப்பாளர்கள்:
சரு இம்மானுவல். மேஜன் சண்'
எஸ். கே. ராஜன்.
பல்க்கன் ஏஜென்சி
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.
ரிக்கற் மண்டபவாசலில் பெறலாம்.

பொதுநலவமைப்புத் தினமாக மார்ச் 10

(கொழும்பு)

கல்வியமைச்சு மார்ச் மாதம் 10ம் திகதியை பொதுநலவமைப்புத் தினமாகப்பிரகடனப் படுத்தியுள்ளது.

அன்று பொதுநலவமைப்பு தினத்தைக் கொண்டாடுமாறு எல்லாப் பாடசாலைகளுக்கும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது. இது சம்பந்தமாக நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து நடாத்துமாறும் எல்லாப்பாடசாலைகளையும் கல்வியமைச்சு பணித்துள்ளது.

பொதுநலவமைப்பு சம்பந்தமான பொருட்காட்சியைப் பாடசாலைகளில் நடத்துமாறு அதிபர்களைக் கல்வியமைச்சு கேட்டுள்ளது.

இத்தினத்தில் பொதுநலவமைப்பு நாடுகளின் கொடிகளை தாங்கிய ஊர்வலங்களை நிகழ்ச்சிகளின் ஒரு அம்சமாக சேர்த்துக் கொள்ளும்படியும் பாடசாலைகளைக்கல்வியமைச்சு கேட்டுள்ளது. (வெ)

மலிவு விற்பனை
சிறந்தரக கோல்டன்பிரவலி யர்கள்
கொட்டன்- பொலியஸ்டர்-
டெட்றோன்
12/50, 13/50, 14/50.
வியாபாரிகளுக்கு விஷேச கழிவு.
சாயிராம் கார்மென்ஸ்
விநியோகஸ்தர்கள்
சிக்கோ டிறேடர்ஸ்,
43, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

வேலை பெற்றுத்தருவதாக மோசடி:

தொழிற்சங்க பிரமுகரை விசாரிக்க உத்தரவு!

அமிரின் குற்றச்சாட்டுக்கு சபாநாயகர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வேலைபெற்றுத் தருவதாகக் கூறிப் பல இளைஞர்களிடமிருந்து பணமோசடி செய்துள்ளதாக பாராளுமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள தொழிற்சங்கப் பிரமுகர் மீதான குற்றச்சாட்டுக்களைப் பற்றி விசாரணை நடத்துமாறு சபாநாயகர் லஞ்ச ஆணையாளர் திணைக்களத்திற்கு உத்தரவிட்டுள்ளார்.

வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் அரசாங்க சார்பு தொழிற்சங்கமான ஜாதிக சேவா சங்கத்தின் பிராந்தியச் செயலாளரான எஸ். தயாபாலாவிற்கு எதிராக எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் குற்றம்சுமத்தியிருந்தார்.

குற்றச்சாட்டுச் சம்பந்தமாக விசாரணையை நடத்துமாறு சபாநாயகர் லஞ்ச ஆணையாளர் திணைக்களத்திற்கு உத்தரவிட்டதைத்தொடர்ந்து லஞ்ச ஆணையாளர் அலுவலகத்தைச் சேர்ந்த திரு. சி. தவலிங்கம் பணம் கொடுத்த நபர்களை இம்மாதம் 8-ந் திகதி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் சான்றுகள், பற்றுச்சீட்டுகள், சாட்சிகளுடன் பிரசன்னமாயிருக்கும்படி கேட்டுள்ளார்.

இதே நபர் தென்பகுதியிலிருந்து வடபிரரந்தியத்திற்கு மாற்றம் பெற்றுத்தருவதாகக் கூறி பல தமிழ்ச் சாரதி, காப்பாளர்களிடமிருந்து கைலஞ்சம் பெற்றுள்ளதாகவும் தெரியவருகின்றது. (கு)

புதிய பஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மும் அரசு பஸ் கட்டணத்தை உயர்த்தவில்லை. அதனால் பிராந்திய சபைகள் பெரிதும் பாதிப்படைந்தன. தற்போதைய பஸ்கட்டண உயர்வினால் பிராந்திய சபைகள் ஓரளவு தங்களது நஷ்டத்தை பாதுகாக்கமுடியுமே தவிர லாபத்தில் இயங்கமுடியாது.

சமீபத்தில் வடபிராந்தியத்திற்கு 25 புதிய பஸ்கள் தருவிக்கப்பட்டன. அதன்பின் 20 வீத மக்கள் கூடுதலாக பஸ் பிரயாணத்தை மேற்கொள்ளுகிறார்கள். பல பஸ்கள் இருந்தாலன்றி மக்களின் போக்குவரத்துச்சேவையைச்சமாளிக்க முடியாது. (கொ-இ)

வானொலியில் இன்று

(யாழ்ப்பாணம்)

நாச்சிமார்கோவிலடி சங்கீதரத்தினம் அ. ரகுநாதனின் மிருதங்கதாளவாத்திய கச்சேரி இன்று இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்படவுள்ளது.

தமிழ்ச்சேவை ஒன்றில் இன்றிரவு 10-15-க்கு ஒலிபரப்பப்படவுள்ள இக்கச்சேரியில் ரி. ஜெயசுந்தரம் கஞ்சிராவும், செல்வராசா கடமும், எஸ். சோமசுந்தர சர்மா பல்லவியும் வாசிப்பார்கள். (கு)

பிரெஞ்சுப் பாடகி இசைவிருந்தளிப்பார்

(யாழ்ப்பாணம்)

இன்று மாலை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள ஆழிக்குமரன் ஆனந்தனது இசைநிகழ்ச்சியில், யாழ்ப்பாணத்தில் முதல்தடவையாக, பிரெஞ்சு பாடகி ஒருவர், தமிழ்க்கலைஞர் ஒருவருடன் இசைவிருந்தளிப்பார். இந்நிகழ்ச்சியில் நான்கு பெண்பாடகிகள் உட்பட ஆறு பெண்கலைஞர்கள் கலந்துகொள்வர். (கெ)

வளர்ச்சிகாண் தொழில்நுட்பம்

கண்காட்சியில் முதல்நாள் 'சண்டியன் சின்னத்தம்பி'

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்லூரியில் நாளையதினம் ஆரம்பமாகும் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினரின் வளர்ச்சிகாண் தொழில் நுட்பக் கண்காட்சி முதல் நாள் இரவு கலைநிகழ்ச்சிகளில் ஒன்றாக 'சண்டியன் சின்னத்தம்பி' மேடையேறுகின்றது.

தினமும் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் கண்காட்சி இரவு 9-50 மணியளவில் முடிவடையும். இரவு ஏழு மணிக்கு ஆரம்பமாகும் கலைநிகழ்ச்சிகளுக்கு விஷேச கட்டணமுண்டு. இதற்கான சீட்டுக்களைக் கல்லூரி ஓட்லிமண்டபத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கண்காட்சியில் தொழில் துறையினரும் தனியார் நிறுவனங்களும் தமது காட்சிச் சாலைகளை அமைப்பதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

சீ-நோர் ஸ்தாபனத்தினர் விசேட காட்சிச்சாலை ஒன்றை அமைக்கின்றனர், இதற்கான பொருட்களைப் பொருத்துவதில் அந்நிறுவனத்தின் பிரதிநிதிகள் ஈடுபட்டுள்ளனர்.

பரந்தன்இரசாயன தொழிற்சாலை, காங்கேசன்துறை சீமெந்துத்தொழிற்சாலை ஆகிய ஸ்தாபனங்களும் காட்சிச்சாலைகளை அமைக்கவிருக்கின்றன.

லயன்ஸ்கழக உறுப்பினர்கள் துணைவிமார்கள் விசேஷ சிற்றுண்டிச்சாலையொன்றை நிறுவவுள்ளனர்.

சைக்கிள், மற்றும் வாகனப் பாதுகாப்புக்கான வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. விசேஷ மின் ஒலி வசதிகளும் செய்யப்படுகின்றன.

கண்காட்சியின்போது பாதுகாப்பு முதல் உதவி போன்ற வசதிகளும் செய்யப்படுகின்றன. விசேஷ தொண்டர் படையொன்றும் நிறுவப்படவுள்ளது. யாழ்ப்பாணக் கல்லூரி-விக்டோறியாக் கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும் இதில் இடம்பெறுகின்றனர். விக்டோறியாக் கல்லூரி அதிபர் இந்த ஒழுங்குகளைக் கவனிக்கின்றார்.

ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை

வில்சன், நீலன் ஆகியோர் கைச்சாத்தின்றி கையளிப்பு

(கொழும்பு)

நிருவாகத்தைப் பரவலாக்குவது தொடர்பாக ஆராய்வதற்கென நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு தனது அறிக்கையை நேற்றுமுன்தினம் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவிடம் கையளித்தது.

முன்னாள் பிரதம நீதியரசர் திரு, விக்டர் தென்னக்கோன் தலைமையில் 10 பேர் கொண்ட குழு இது சம்பந்தாக நியமிக்கப்பட்டது தெரிந்ததே.

இவ் ஆணைக்குழு உறுப்பினர்களில் 8 பேரது கைச்சாத்துகளுடன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இவ் ஆணைக்குழுவில் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினரான கலாநிதி நீலன் திருச்செல்வம் இது சம்பந்தமாகத் தனியான ஒரு அறிக்கை தயாரித்து ஜனாதிபதியிடம் கையளித்தார், ஆணைக்குழுவின் பிரதான அறிக்கையில் கலாநிதி நீலன் திருச்செல்வம் கையொப்பமிடவில்லை ஆணைக்குழுவின் மற்றொரு அங்கத்தவரான பேராசிரியர் ஏ. ஜே. வில்சனும் இதில் கைச்சாத்திடவில்லை.

கனடாவிலுள்ள பேராசிரியர் வில்சன் மேற்படி அறிக்கையின்பிரதி தனக்கு கிடைக்கவில்லையென்றும். தான் அறிக்கையை மறுபரிசீலனை செய்யும்வரை அதனை ஜனாதிபதியிடம் கையளிக்க வேண்டாமென்றும் தந்திமூலம் ஆணைக்குழுவிற்கு வேண்டுகோள் விடுத்திருந்தார். ஏற்கனவே ஆணைக்குழு தனது அறிக்கையைச் சமர்ப்பிக்க நான்கு தடவைகள் அவகாசம் வழங்கப்பட்டுவிட்டதால் மேலும் அவகாசம் கோரவிரும்பாததாலேயே அறிக்கை அவரின் கையொப்பமின்றி ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டதாகவும். பேராசிரியர் வில்சனின் அறிக்கைப் பிரதிகிடைத்ததன்னர் கனடாவிலிருந்துதமதுகருத்தைஜனாதிபதிக்கு அறிவிப்பாரென்று ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

கலாநிதி நீலன் திருச்செல்வம் சமர்ப்பித்திருந்த அறிக்கை அடிப்படைகளில் பிரதான அறிக்கையை ஒத்தும், நடைமுறைகளில் வேறுபட்டும் அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதான அறிக்கையில் ஆணைக்குழு அங்கத்தவர்களான திரு. கே. நவரத்தினராசா, ஜனாப் கள் ஏ. சி. எம். அமீர், எம். ஏ. அசீஸ் ஆகியோர் தமது தனிப்பட்ட கருத்துக்களையும் தனியாகச் சமர்ப்பித்தனரெனவும் தெரியவருகிறது. (வெ-கு)

மன்னாரில் சு. க. கிளைகள்

(மன்னார்)

சிறீ லங்கா சுதந்திரக்கட்சி அரசாங்க காலத்தில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பிரதம அமைப்பாளராகவும் மன்னார் மாவட்ட அரசியல் அதிகாரியாகவும் கடமையாற்றிய திரு. கே. பி. இரத்நாயகாவும், சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. இரத்தினசிறி விக்கிரமநாயக்காவும் மன்னாருக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் இதுவரை 15 சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் கிளைகள் நிறுவப்பட்டுள்ளன.

கத்திக்குத்துக்கு பலி!

(மாவிட்டபுரம்)

குடும்பத் தகராறின் எதிரொலியாக 30 வயது நபர் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

வசாவிளானைச் சேர்ந்த வேலன் சந்திரன் என்பவரே இவ்வாறு கொலையுண்டவராவார்.

குடும்பங்களிடையே ஏற்பட்ட சிறு தகராறு கைகலப்பாகமாறி, பின்னர் இக்கொலைச் சம்பவம் நடந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். சந்தேக நபரான கட்டையன் குட்டிமணி என்பவர் தலைமறைவாகியுள்ளதால் பொலிசார் அவரைத் தேடி வலைவிரித்துள்ளனர்.

தேவை
73, கஸ்தூரியார் வீதியில் இருக்கும் கல்யாணி கிறீம் ஹவுஸுக்கு உடனடியாக சப்ளையர்கள் (Suppliers) தேவை நேரில் வரவும்.
தொலை பேசி: 8077
5111

மரண அறிவித்தல்

தா. சிதம்பரப்பிள்ளை

புலோலியைச் சேர்ந்த இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர் தா. சிதம்பரப்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற நவரத்தினமாலையின் கணவரும், திருமலர் (விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி), திருஅருள் (ஆசிரியை வட இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை) ஆகியோரின் தந்தையாரும். கணேஷ் (உதவி அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்), கணபதிப்பிள்ளை (பெற்றோலியம் கூட்டுத்தாபனம், கொழும்பு) ஆகியோரின் மாமனாரும் ஆவார். இறுதிச் சடங்குகள் (2-3-80) ஞாயிற்றுக்கிழமை (இன்று) மாலை இரண்டு மணிக்கு புலோலியில் நடைபெறும்.

செ. கணேஷ்
5113

இப்பத்திரிகை [illegible] நாடு லிமிட்டெ[illegible] தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில்
மார்ச்மாசம் 2-ந் [illegible] அச்சிட்டு வெளியிடப்பட்டது.
[illegible] Office. Sri Lanka [illegible] No QH/8948/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 8[illegible]